
# தமிழரசு

1.10.1996 ரூ.3







## இந்த இதழில்....


திட்டங்களின் பலன் ஏழை - எளிய மக்களைச் சென்றடைய வேண்டும் - மாண்புமிகு முதல்வர், கலைஞர் 2

மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் ''மூலிகை பெட்ரோல்'' 4

புது டில்லியில் திட்டக்குழுக் கூட்டம் - மாண்புமிகு முதல்வர் உரை 6

மின் துறையில் வெளி நாட்டார் முதலீடு 12

அன்பு என்பது... 14

பாட்டுப் பிறந்த விதம் – பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 18

மருத்துவம் - தாய்ப்பால் 21

குரு - சிறுகதை 24

வேலை வாய்ப்புகள் 33

'நோபெல்' 41

எங்கள் ஊர் பிரச்சினை 46

ஆசிரியர் மடல் 48



# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

புரட்டாசி திங்கள்: 16

மலர் :27 இதழ் : 7


1.10.1996

விலை ரூ. 3.

# திட்டங்களின் பலன் ஏழை - எளிய மக்களைச் சென்றடைய வேண்டும்:

முதல்வர் கலைஞர் உரை

''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மாநிலத் திட்டக்குழு எனது தலைமையில் உருவாக்கப் பட்டதை நினைவிற்குக் கொண்டு வரும்போது மகிழ்ச்சி பல மடங்காகப் பெருகுகிறது. இந்தக் காலகட்டத்தில் பல விதமான அரசியல் பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பல்வேறு மாநில கட்சிகளின் ஆதரவோடு மைய அரசு அமைக்கப்







பட்டிருக்கும் இத்தருணத்தில் புதிய கண்ணோட்டத்தில் மாநில மைய அரசிடையேயான உறவு பார்க்கப்படுகிறது. கூட்டாட்சி அமைப்பில் வலுவான மாநிலங்களின் பங்கு உணரப்பட்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சியில் மாநிலங்கள் வகிக்கும் பங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பட்டு வருகிறது.


எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். மாநிலத்தின் வளர்ச்சி வேகத்தை ஊக்குவிக்கவும், வளர்ச்சியின் பயன் எல்லாப் பிரிவினருக்கும் சீராகச் சென்றடையும் வகையில் செயல்படுத்தவும் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். பல்வேறு துறைகளில் சிறந்த அனுபவம் வாய்ந்த உங்களைக் கொண்டு இப்பணியைச் செம்மையாகச் செயலாக்க முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் காலகட்டத்தில் இதுவரை நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியமாகும். பல்வேறு திட்டங்களின் அடிப்படை நோக்கங்களில் முக்கியமானவை, வறுமையை ஒழிப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதும் ஆகும். இவ்விரு குறிக்கோளையும் எட்டுவதற்குத் தீட்டப்பட்ட திட்டங்களால் நமது மாநிலத்தில் எந்த அளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று ஆராயும் பொழுது முழு மனநிறைவு ஏற்படாத நிலை உள்ளது.

தொடர்ந்து வறுமைக் கோட்டிற்குக்கீழே இருப்பவர்கள் எண்ணிக்கை அகில இந்திய அளவைவிட கூடுதலாகவே இருக்கின்றது. மையத் திட்டக்குழு கணக்குகளின்படியாக இருந்தாலும், மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கின்றனர் என்ற நிலை இன்னமும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் தனி நபர் சராசரி வருமானம் இந்தியாவின் தனிநபர் வருமானத்தைவிட கூடுதலாக இருப்பினும் வறுமைக் கோட்டில் இருப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது, திட்டங்களின் பயன் அனைத்துத் தரப்பினருக்கும் குறிப்பாக ஏழை எளியவருக்குச் சென்றடையவில்லை என்பது வெளிப்படுகிறது.

வேலை வாய்ப்புக்கோரி பதிவு செய்து இருப்பவர்களின் எண்ணிக்கையும் தமிழகத்தில் கூடுதலாக இருக்கின்ற தகவலையும் சேர்த்துப் பார்க்கும்போது, திட்டங்களின் குறிக்கோள்களை எய்துவதற்கு நாம் மேற்கொண்டுள்ள செயல் முறைகளில் மாற்றங்கள் தேவையா என்றும் ஐயப்பாடு எழுகிறது. ஏழை எளிய மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிடவும் அவற்றின் செயலாக்கம் குறிக்கோளை அடையும் வகையில் இருப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கவும், பொதுவான வளர்ச்சியின் பயன்கள் ஏழை எளியவரையும் அடையும் சூழ்நிலையை ஏற்படுத்தவும் திட்டக் குழுவின் ஆய்வுகளும், பரிந்துரைகளும் அடிகோல வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.''

**– 14.9.1996ல் சென்னையில் நடைபெற்ற மாநிலத் திட்டக்குழுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய - உரையிலிருந்து.**



## அழகிய ரோஜா!

ஆங்கிலக் கவிஞர் மில்டனின் நெருங்கிய நண்பர் ஒருவர் ஒருநாள் அவரிடம் சொன்னார்: ''உங்கள் மனைவி ரோஜாவைப்போல மிகவும் அழகாக இருக்கிறார்!''

மில்டன், அதைக் கேட்டுவிட்டுப் பெருமூச்சுடன் சொன்னார்:'' உங்கள் ரசிப்புத் தன்மைக்கு நன்றி; ஆனால் ஒன்று. என்னால் அனுபவிக்க முடிந்ததெல்லாம் பெரும்பாலும் அந்த ரோஜாவின் முட்கள் தரும் வேதனையை மட்டுமே!''

# முதல்வர் முன்னிலையில் ''மூலிகை பெட்ரோல்''

இராஜபாளையம் அருகில் உள்ள இடையார் பாளையத்தைச் சேர்ந்த ராமர்பிள்ளை என்பவர், மூலிகை மூலம் பெட்ரோல் தயாரிப்பதைக் கண்டு பிடித்துள்ளார். இவர், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் தண்ணீரிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் முறையை 16.9.1996 அன்று செய்து காட்டினார்.

முதலில் அவர், சூடாக்கப்பட்ட தண்ணீரை மாண்புமிகு முதல்வர் அவர்களின் முன்னிலையில் கொண்டுவந்து வைத்தார். மூலிகையை எடுத்து மாண்புமிகு முதல்வரிடம் கொடுத்தார்; அவர், அதை எடுத்து வெந்நீரில் போட்டார். பின்பு எலுமிச்சம் பழத்தையும், உப்பையும் மாண்புமிகு முதல்வரிடம் கொடுத்து வெந்நீர்க் கலவையில் போடவைத்தார். பின்னர், ராமர்பிள்ளையும், அவருடன் வந்திருந்த பெண்மணியும் பெட்ரோல் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். அந்தக் கலவையில் அவர்கள் ஏற்கெனவே தயாரித்து வைத்து இருந்த ரசாயனக் கலவையை ஊற்றினார்கள்.

பின்னர், ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்த மூலிகை பெட்ரோலில் இருந்து 10 சொட்டு, அந்தக் கலவையில் விடப்பட்டது. பின்பு அந்தக் கலவையை அப்படியே வெள்ளைத் துணியில் மூடிவைத்தனர். 15 நிமிட நேரம் மூடி வைத்திருந்தனர். இடைப்பட்ட நேரத்தில் ஏற்கெனவே தயாரித்து வைத்து இருந்த மூலிகை பெட்ரோலில் இருந்து ஒரு சொட்டு எடுத்து நுகர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெட்ரோல் வாசனை வருவதாகக் கூறினார்.



''ராமர்பிள்ளையிடம் எப்படி இந்த மூலிகையைக் கண்டுபிடித்தீர்கள்?'' என்று கேட்கப்பட்டது. ராமர்பிள்ளை,'' 1973ல் மாணவர்களுக்குச் சமையல் செய்தபோது இந்தப்பச்சிலை தற்செயலாகத் தீப்பற்றி எரிந்தது. அது என்ன இலை என்று கண்டுபிடிக்க முயற்சி செய்தும் என்னால் முடியவில்லை. 10 ஆண்டுகள் தேடிக் கண்டுபிடித்தேன். என் வளர்ப்புத்தந்தை ராமய்யா எனக்குத் தேவையான

எல்லா உதவிகளையும் செய்தார். நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் பெட்ரோல் தயாரிக்கலாம். அரசு உதவி செய்தால் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர்கள் தயாரிக்க முடியும்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் பெட்ரோல் தயாரிக்க அனுமதி வழங்கி இருக்கிறார். ஆவடியில் ஒரு இடம் ஒதுக்கி அவர் பெட்ரோல் தயாரிக்க உதவிசெய்வதாகவும் ''பேட்டன்ட்'' உரிமையை மத்திய அரசுதான் வழங்க வேண்டும், அதற்கு நாம் உதவி செய்யலாம் என்றும் கூறினார்.

மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட பெட்ரோலைப் பத்திரிக்கை நிருபர் ஒருவரின் மொபட் வாகனத்தில் ஊற்றி ஓட்டிப் பரிசோதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மத்திய அமைச்சர் திரு. முரசொலிமாறன், முன்னாள் மத்திய அமைச்சர் திரு சிவசங்கர், தமிழக அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு.கே.ஏ. நம்பியார், அரசு உயர் அலுவலர்கள், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்துகொண்டனர். ராமர்பிள்ளையையும் அவரது குடும்பத்தினரையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட்டி ஒரு பார்க்கர் பேனாவை ராமர்பிள்ளைக்குப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார்.

இறுதியில் செய்தியாளர்கள், இந்தச் சாதனையைப்பற்றி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் கேட்டபோது - ''புரட்சியாகவும் தெரிகிறது; மிரட்சியாகவும் தெரிகிறது; உண்மையிலேயே பெட்ரோலாக இருந்தால் தமிழகத்தில் வறட்சியே இருக்காது!'' என்றார் அவர்.

# கர்நாடகத்தில் தமிழ்

கர்நாடகத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கான தகுதிபற்றிக் கர்நாடக அரசு ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகவும், ஆசிரியர் பயிற்சி பெற விரும்புவோர் ஆங்கிலம், கன்னடம், இந்தி, மராத்தி, உருது, தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஏதேனும் இரண்டு மொழிகளைப் படித்திருக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது தமிழ்மொழி அந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

இதனால், தமிழ்மொழி படித்தவர்கள் ஆசிரியர் பயிற்சியில் சேரமுடியாத நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைப் போக்க வேண்டும் எனவும், அந்த உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கர்நாடகம் சென்றிருந்தபோது, அம்மாநில முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் இந்த வேண்டுகோளை உடனே (4.9.96) ஏற்றுக்கொண்டார். தமிழ் மொழியும் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் அதற்கான திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# ஆண்டுத் திட்டத்தில் ஊரக வளர்ச்சிக்கும் சமூக நலப் பணிகளுக்கும் முன்னுரிமை

**1996-97** ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற, மத்திய அரசின் திட்டக்குழு ரூ. 3700 கோடிக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட ரூ. 500 கோடி அதிகமாகும். அதாவது 15.62 சதவீதம் கூடுதலாகும்.

மத்திய திட்டக்குழுவுடன் 20.9.96 அன்று கலந்துரையாடியதன் விளைவாக ஏற்கெனவே நிர்ணயித்திருந்த தொகையைவிட ரூ. 122 கோடி அதிகமாக நிதி உதவி அளிக்க மத்திய திட்டக்குழு இசைந்துள்ளது.


திட்டங்களை அறிவிப்பதோடு நின்று விடாமல், அவற்றின் பயன்கள் அனைத்தும் மக்களிடம் சென்றடைய வேண்டும் என்றால் சரியான தொடர் நடவடிக்கைகளும் கண்காணிப்பும் தேவை. இவையிரண்டும் உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் அமர்ந்தால் தான் சிறப்புற நடைபெற முடியும் என்பதை உணர்ந்த தனது அரசு பொறுப்பேற்ற மூன்று மாதங்களுக்குள்ளாகவே உள்ளாட்சி மன்றங்கள் தேர்தல்களை நடத்திடத் திட்டமிட்டு அதனைச் செயல்படுத்தியுள்ளது.

அக்டோபர் 12 ஆம் நாளுக்குப்பிறகு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் முடிவுற்று, மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்பு பொறுப்பேற்ற பின்னர், அடித்தளத்தில் உள்ள மக்களின் தேவைகளைக் கணக்கிட்டு அதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு முன், திட்டக்குழுவுடன் கலந்தாலோசிக்கப்படும் அதற்காகத் திட்டக்குழுத் துணைத் தலைவர் உறுப்பினர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தர வேண்டும்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் அணுகுமுறை பற்றிய கருத்தினைத் திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் மதுதண்டவதே அவர்களுக்குக் கடிதம் மூலம் விரிவாகத் தெரிவிக்கப்படும்.

1996-97-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடாகிய ரூ. 3700 கோடியில் ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மை மேம்பாட்டுக்கு 25 சதவீத ஒதுக்கீடும், சமூக நலப் பணிகளுக்கு 25 சதவீதத்திற்கும் அதிகமான ஒதுக்கீடும் - அதே போல மின் திட்டங்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடும் செய்வதன் மூலம் இத்திட்டங்களுக்கு நடப்புத் திட்ட ஆண்டில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**– 20.9.96 அன்று புதுடில்லி மைய திட்டக்குழு கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து**



# தமிழகத்தில் காந்தியார்

''தமிழர்களை நான் சந்திக்கும்போது, எனது உடன் பிறந்தவர்களைச் சந்திப்பது போன்றே உணர்கிறேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் போற்றி வளர்த்து வந்துள்ள மனோபாவம் இது. இதற்குக் காரணமுண்டு.

''தென்னாப்பிரிக்க இந்தியரிடையேயுள்ள பல்வேறு பிரிவினரில் போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள்தான் என்று நான் கருதுகிறேன். சத்தியாக்கிரகத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களில் மிக அதிகமானவர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவர்களே! நாராயணசாமியின் எலும்புகள் டெலகுடா வளைகுடாவில் மூழ்கிக் கிடக்கின்றன. அவர் ஒரு தமிழர். நாடு கடத்தப்பட்டவர்கள் தமிழர்கள். கடைசிவரை போராடியவர்களும், கடைசியாகச் சிறையிலிருந்து வெளியில் வந்தவர்களும் தமிழர்களே!



''தெருவில் விலை கூறி விற்பனை செய்த வாணிகத்தை அறவே இழந்தவர் அனைவரும் தமிழர்களே. டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த சத்தியாக்கிரகிகளில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இந்தியாவின் மிகச் சிறந்த பாரம்பர்யத்திற்குச் சான்று தாங்கள்தான் என்பதைத் தமிழர்கள் மெய்ப்பித்து இருக்கிறார்கள். எள்ளளவும் மிகைப்படுத்தி இதை நான் கூற வில்லை.

''சிறைக்குச் சென்ற பெண்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. கைதியாகத் தயார் என்று அறைகூவல் விடுத்து, அதிகாரிகளை மீறியவர்கள், நீயூகாசிலில் வீடு வீடாகச் சென்று, சுரங்கம் சுரங்கமாகச் சென்று வேலை செய்யும் கருவிகளைப் போட்டுவிட்டு வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களை வேண்டிக் கொண்டவர்கள் யார்? மீண்டும் சொல்கிறேன், அவர்கள் எல்லாம் தமிழ்ச் சகோதரர்களே! பெண்களிடையிலிருந்து போராட்டத்திற்கு அணிவகுத்துவந்தவர்கள் யார்? உறுதியாகச் சொல்லுகிறேன், தமிழர்களே! ஒரு ராத்தல் ரொட்டியும், ஒரு அவுன்ஸ் சக்கரையும் உண்டு வாழ்ந்தவர்கள் யார்? பெரும்பாலும் தமிழர்களே!

''இந்த விஷயத்தில் கல்கத்தாவைச் சேர்ந்தவர்களின் தியாகத்திற்கும் நாம் உரிய பங்கை அளிக்க வேண்டுமென்றாலும், அவர்கள் கடைசிப் போராட்டச் சங்கநாதத்திற்கு மிகச் சிறந்த முறையில் செவி சாய்த்தார்கள் என்றாலும் — தமிழர்களைப் போன்று அவ்வளவு சிறந்த முறையில் அல்ல.

''மீண்டும் மீண்டும் சிறைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையை நினைவில் கொண்டு பார்த்தாலும், அதில் தமிழர்களுடைய

எண்ணிக்கையே அதிகமிருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே, தமிழர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றுக்கு வரும்போது ரத்த பாசமுடைய கூட்டம் ஒன்றுக்கு வருவதாகவே உணர்கிறேன். அவ்வளவு ஆண்மை, அவ்வளவு நம்பிக்கை, அவ்வளவு கடமை உணர்வு, அவ்வளவு உயர்ந்த எளிமை தங்களிடமிருக்கிறதென்பதைத் தமிழர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

''நான் பேசியது அவர்களுடைய மொழியிலல்ல. அவர்களுடைய மொழியில் பேச வேண்டுமென்று எனக்கு எவ்வளவோ, விருப்பந்தான், ஆனாலும், பேச முடியவில்லை. எனினும் தொடர்ந்து அவர்கள் உறுதியாகப் போராடினார்கள். அது மகத்தான, வளம் பொருந்திய அனுபவம். அதை எனது வாழ்நாள் இறுதிவரை கருவூலம் போல் போற்றுவேன்.

''தமிழர்கள் எதற்காகப் போராடினார்களோ. அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். பிரிட்டிஷ் குடியேற்ற நாடு ஒன்றில் பிறந்த அவர்கள் கேப் பகுதியில் நுழைய உரிமையிருக்கிறதென்பதை நிலைநாட்டப் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள்.

''சட்டங்கள் நியாயமான முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். ஆரஞ்சு ப்ரீஸ்டேட்டில் சட்டத்தை அமல் நடத்துவதில் நிற உணர்ச்சி காட்டப்படுவதை எதிர்த்து அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். மூன்று பவுன் வரி என்பது கடந்த கால விஷயமாகப் போய்விட்டது.

''திருமணச் சிக்கலைப் பொறுத்தவரை சிறைக்குச் சென்ற நமது அன்புச் சகோதரிகள் எல்லாம் இன்று தங்கள் கணவன்மார்கள் என்று கூறிக்கொள்ளலாம். நேற்றோ ஒரு நண்பர் வேண்டுமானால் அபிமானத்துடன் அவ்வாறு கூறியிருப்பாரே யொழிய சட்டப்படி அவர்கள் மனைவிமார்கள் அல்ல.''

(தமிழ்நாட்டில் காந்தி)

கற்களால் கட்டப்படும் கோயில்களை விட, மனித உடல்களே உண்மையான கோயில்களாகும்.

பொய்யை உண்மையாலும், விரோதத்தை அன்பாலும், ஆத்திரத்தை சகிப்புத் தன்மையாலுமே வெல்லலாம்.

– காந்தியடிகள்

தங்கக் கட்டிகளாக இருக்கக்கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்தி, பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள த[illegible]மாக ஆக்க வேண்டும்.

அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம்.

– அறிஞர் அண்ணா

**அட்டைப்பட விளக்கம் :**

*முதல் அட்டை :*

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சங்கர்தயாள் சர்மா அவர்கள் சென்னை வந்தபோது விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார். (19.9.1996)

*இரண்டாம் அட்டை :*

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் மூலிகையிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் முறையினை திரு. இராமர்பிள்ளை என்பவர் செய்து காட்டினார். (16.9.1996).

*நான்காம் அட்டை :*

காந்தியடிகள் பிறந்தநாள் நினைவாக

## அறிவு வெளிச்சம் பரப்புவோரை வாழ்த்துவோம்!

**ஆசிரியர் நாளான 5.9.96 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு வாழ்த்துச் செய்தி விடுத்திருந்தார்; அதன் விவரம் வருமாறு:**

நாடு போற்றும் நல்லாசிரியர்திலகமான மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாளை ஆசிரியர் நாள் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

''ஒரு நாட்டை உருவாக்கும் உண்மையான மாந்தர்கள் ஆசிரியர்களே'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அணு ஆயுதங்களைவிட ஆற்றல் மிகுந்த அறிவாயுதங்களை உருவாக்குபவர்கள் ஆசிரியப் பெருமக்களே. இவர்களுள் தகுதியும் திறமையுமுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, தமிழக அரசு ஆண்டுதோறும் 'நல்லாசிரியர் விருது' வழங்கிச் சிறப்பிக்கின்றது. இந்தப் பண்பாளர்களைப் பாராட்டும் இந்நாளில், ஆசிரியர்கள், மாணவர்கள் தலைமுறையினரிடையே மரபு வழிப் பண்பாட்டையும் மனித நேயத்தையும் ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி, ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று உளமாரக் கருதுகிறேன். மேலும், கி.பி. 2000 ஆண்டிற்குள் அனைவருக்கும் கல்வி' என்கிற இலட்சியத்தை முன்னிறுத்தி இருண்ட வீடுகளில் கல்வி விளக்கைப் பொருத்தி இருட்டு வீதிகளில் அறிவு வெளிச்சம் பரப்பி, நமது இலக்கினை எய்துவதற்குத்தமிழக அரசு மேற்கொண்டுள்ள முனைப்பான செயல் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டியது ஆசிரியர்களின் தலையாயப் பொறுப்பு என்பதையும் இந்நாளில் நினைவுகூறுதல் பொருத்தமுடையதாகும்.

இந்த நன்னாளில் ஆசிரியர்கள் உள்ளந்தோறும் உவகை ஊற்றெடுக்க, அவர்கள் இல்லந்தோறும் இனிமை பூத்திருக்க அனைத்து தரப்பினரும் வாழ்த்துவோம். பாராட்டுவோம்.

## டாக்டர் இராதாகிருஷ்ணன் சிந்தனைகள்

- கல்வியின் குறிக்கோள், நல்லதொரு நிகழ்ச்சியை உண்டாக்க வேண்டும். அவ்வாறின்றி, அறிவை மட்டும் புகட்டுவதும், பரிமாறிக் கொள்வதும் மட்டுமே கல்வியினுடைய குறிக்கோள் ஆகிவிடாது.
- மிக நுண்ணிய செய்திகளை மனத்தில் திணித்துமணம்செய்வது, அனைவருக்கும் எடுத்துரைப்பது மட்டுமே கல்வியல்ல; அது, பார்வையற்றவர்களுக்குக் கண்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, கண்போன்ற எதையோ அவர்களுக்கு ஒட்ட வைப்பது போலாகிவிடும்.
- மக்களுக்கு நல்ல புத்தியும், எதிலும் சரியான தீர்வு காணக்கூடிய சிறந்த ஆலோசனையும் கொடுப்பதே படித்த பட்டதாரிகளின் அன்றாடக் கடமையாக இருக்க வேண்டும்.
- ஆசையைக் கிளறும் பொருளை அனுபவிப்பதால், அந்த ஆசை என்றும் திருப்தி அடைவதில்லை. எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவது போல, அந்த ஆசையானது மென்மேலும் வளர்ந்து கொண்டே போகிறது.
- அறிவினாலோ, சமுதாயத்தாலோ உருவாகின்ற கொடுமைகளுக்கு ஆதரவளிக்கும் எந்தப் பண்பாடும் பண்பாடே அல்ல; இவ்வுலகின் சுதந்திர ஆன்மாக்கள் - பண்பாடு மிகுந்த, கரைகாணாக் கல்வியால் சிறந்த பெரியோர்களேயாவர். இந்தியப் பண்பாட்டில் அடிப்படைத் தத்துவம், மனிதத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதிலேயே அமைந்திருக்கிறது. இந்த உலகம் முழுவதும் ஒரே குலம்; ஒரே குடும்பம்.





## டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

ஆசிரியர் நாள் விழா நிகழ்ச்சி 7.9.96 அன்று கலைவாணர் அரங்கத்தில் அரசு சார்பில் சிறப்புடன் நடைபெற்றது. 230 தலைமை ஆசிரியர்கள் உட்பட 288 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதும், 10 ஆம் வகுப்பு, +2 வகுப்புகளில் சிறப்பிடம் பெற்ற 178 மாணவர்களுக்குப் பரிசும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார். விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனி இந்த விருது ''டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது'' என்றே அழைக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

## தேவநேயப் பாவாணர் குடும்பத்திற்கு ரூபாய் 20 இலட்சம் நிதியுதவி

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில்' தனித்தமிழ் இயக்கம் கண்டவர், தமிழர்களுடைய உரிமைகளுக்காக வாதிட்டவர், தமிழக அரசின் சார்பில் 'அகர முதலி' என்ற ஒரு அருமையான கருவூலத்தைஏற்படுத்துவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த-தேவநேயப் பாவாணர் குடும்பத்தாருக்கு ரூபாய் 20 இலட்சம் பரிசுத் தொகையும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப் பட்டது.

# தென்னிந்திய நடிகர்சங்கப்பாராட்டுவிழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அறிவிப்பு

"ஒரு கோரிக்கை -தம்பி ராதாரவி சொன்னார், ''நடிகர் சங்கம் இருக்கிற தெருவுக்கு ஹபிபுல்லா சாலை என்று பெயர் இருக்கிறது; அதை மாற்ற வேண்டும்'' என்று சொன்னார். ஹபிபுல்லா சாலை என்பது ஒரு பெரியவருடைய பெயரால் அந்தக் காலத்து மாநகராட்சி மன்றத்தால் சூட்டப்பட்ட பெயர், அதை மாற்றுவது அவ்வளவு சரியல்ல; அது மாத்திரமல்ல, ஹபிபுல்லா என்பது ஒரு இஸ்லாமியருடைய பெயர். அந்தப் பெயரை மாற்றி சிறுபான்மை மக்களுடைய உள்ளத்திலே ஒரு துளி அளவுகூட மன உளைச்சலை ஏற்படுத்தக் கூடாது என்பதை இங்கே எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

எடுத்த எடுப்பிலேயே, முதல் கோரிக்கையையே ஏற்றுக் கொள்ளவில்லையே, முதல் கோணல், முற்றும் கோணல் ஆகிவிடுமோ என்று ராதாரவியோ, வி.கே. ஆரோ, மற்றவர்களோ கவலைப்பட வேண்டாம்.

ஏதோ ஒரு மருத்துவமனை கட்டியிருப்பதாகவும், அதற்கு மருந்து இல்லை என்றும் அதற்கு அரசு அந்த மருத்துவமனை மருந்துகளை வழங்க வேண்டும்என்றும் ராதாரவி கேட்டிருக்கிறார். நல்வாழ்வுத்துறை அமைச்சர் நண்பர் வீராசாமியினிடத்திலே உடனே சொன்னேன். ஆண்டொன்றுக்கு 50,000 ரூபாய் மருந்துகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மருந்துகளைத்தான் வழங்க முடியும். நோயாளிகளை வழங்க முடியாது. அதை அவர்களே பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீடுகளைப் பொறுத்தவரையில் கோடம்பாக்கம், வளசரவாக்கம் இந்தப் பகுதிகளில் அவர்களுடைய கோரிக்கையைப் படித்தவுடனேயே அண்ணா மாவட்ட ஆட்சியரிடத்திலும், அதைப்போல சென்னை மாவட்ட ஆட்சியரிடத்திலும் சொல்லி அந்த வீடுகளுக்கான ஏற்பாடுகளைக்கவனிக்கஏற்கெனவேஆணை பிறப்பித்திருக்கிறேன். அவ் வீடுகள் கட்டி முடிக்கப்படும். அப்படி கட்டி முடிக்கப்படுகின்ற அந்த வீடுகளுடைய குடியிருப்புக்களுக்கு, நடிகர்கள் வாழக்கூடிய அந்தக் குடியிருப்புகளுக்கு ''நடிகவேள் ராதா குடியிருப்பு'' என்று பெயர் வைக்கப்படும் என்பதையும் நான் இங்கே அறிவிக்கிறேன். காரணம், 'கலைஞர்' என்ற பெயரை எனக்கு வழங்கியவர் அவர். எனவே, அவருடைய பெயரால் 'நடிகவேள் ராதா குடியிருப்பு' என்ற பெயரில் அந்தக் குடியிருப்புக்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடிகர் சங்கத்தின் பெரும்கடனை அடைப்பதற்காக நட்சத்திர இரவு நடத்த வேண்டும். அதற்கு நான் தலைமை தாங்க வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். நான் இந்தத் தொல்லை எல்லாம் வேண்டாம் என்று அரசின் சார்பில் ஒரு உறுதிமொழியை இங்கு அளிக்கின்றேன். இவர்கள் ஸ்டேட் வங்கியிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக்கடனை 'ஸ்டேட்' (மாநில அரசு) தீர்க்கும் என்ற உறுதியை நான் வழங்குகின்றேன். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வளர்ந்துவிட்ட அந்தக் கடனை, கழக அரசு இந்த ஆண்டுக்குள் நிச்சயமாகத் தீர்க்கும். தென்னிந்திய நடிகர் சங்கத்தை சுதந்திரமாக உங்களுடைய கைகளிலே ஒப்படைக்கும். என்ற உறுதிமொழியைத் தந்து உங்களுடைய பாராட்டுக்கு நன்றி தெரிவித்து என்றென்றும் உங்களிலே ஒருவன் என்கின்ற முறையிலே வாழ்த்துகின்றேன்."

– 12.9.1996ல் கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'கலைச்செல்வம்' விருது வழங்கும் விழாவில் பேசியதிலிருந்து

# மின் துறைகளில் வெளிநாட்டார் முதலீடு:

**மாண்புமிகு முதல்வர் வரவேற்பு**

"தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வகையில், சாதகமான சூழ்நிலையை முதலீட்டாளர்களுக்கு அளிக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது அத்தியாவசிய உள் கட்டமைப்புகள், அதிலும் குறிப்பாக மின்சாரம்தான் மிகத் தேவை என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். எனவே, மின்சார உற்பத்தியைக் கூடுதலாகவும், டிரான்ஸ் மிஷன்களை மேம்படுத்தி மின்சார வினியோகத்தை அதிகரிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்.

மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து பெறுவது உள்பட நமது தற்போதைய மின்சக்தித் திறன் 6,579 மெகாவாட்ஸ் ஆகும். இதுவரை, அதிக அளவில் வழங்கப்பட்ட மின்சாரம் 4555 மெகாவாட்ஸ் ஆகும். அதிகபட்சமாகத் தினசரி பயன்படுத்தப்பட்ட மின்சார அளவு 96 மில்லியன் யூனிட்டுகள்.

இன்றைய தேதியில் தமிழகத்தில் மின்வெட்டு என்பது இல்லை; தமிழகத்தில் ஆண்டுதோறும் 10 சதவிகிதம் மின் திறனை அதிகரிக்க முடியும்.

ஒன்பதாவது திட்ட கால இறுதியில் 9020 மெகாவாட்ஸ் தேவையானதாக இருக்கும். 49,200 மில்லியன் யூனிட்டுகள் எரிசக்தி தேவையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திரமான மின்சாரத் தயாரிப்பாளர்களுக்காக மத்திய தாராளமயம் மற்றும் சர்வதேசக் கொள்கையின் அடிப்படையில் இதுவரை 10,650 மெகாவாட்ஸ் திறன் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் (தமிழகத்தில்) 16 நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

1998 ஆம் ஆண்டு இறுதியில் தனியார் மின்சாரத் தயாரிப்பாளர்கள் மூலம் 200 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்றும், 2002 ஆம் ஆண்டில் 3000 மெகாவாட்ஸ் கிடைக்கும் என்றும் 2005 ஆம் ஆண்டில் 9000 மெகாவாட்ஸ் கிடைக்கும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். மின் விநியோகத்திற்கான வசதிகள் ஏற்படுத்துவது குறித்து ஏற்கெனவே திட்டமிட்டுள்ளோம். அதைச் சரியான நேரத்தில் நாங்கள் நிறைவேற்றுவோம்.

இந்த மாநிலத்தில் தனியார்துறையில் கூடுதல் மின் உற்பத்தி நிலையம் ஏற்படுத்துவதற்கான தேவையான இடங்களை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

தனியார் துறையில் உள்ள பிரிமியர் மின் நிறுவனம் மற்றும் நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் தேசிய அனல் மின்கழகம் சென்னையிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் உள்ள செய்யாற்றில் 2000 மெகாவாட்ஸ் திறனுள்ள அனல் மின் நிலையத்தை ஏற்படுத்த உள்ளது.

2000 ஆவது ஆண்டிற்குப் பிறகுதான் தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, அடுத்த நான்காண்டுகளில் நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பெறுவதற்காக 100 மெகாவாட்ஸ் திறனில் நீர்ம எரிபொருள் அடிப்படையிலான சில சிறிய மின் நிலையங்களை அமைக்க உள்ளோம்.

தமிழக மின்வாரியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழகத்தில் 20 இடங்களில் 40 மெகாவாட்ஸ் முதல் 100 மெகாவாட்ஸ் திறனுடன் கூடிய மின் நிலையங்களை ஏற்படுத்த ஏலம் கோரியுள்ளது.

ஏலம் கேட்டவர்களை முறையாகத் தேர்வு செய்து, நியாயமான முறையில் அவர்களுக்கு ஒப்பந்தம் தருவதில் சர்வதேசப் போட்டியின்

தகுதியை அடிப்படையாகக் கொள்வதில் நாங்கள் திடமாக உள்ளோம். எனவே, அந்த ஏலத்தில் பங்குகொள்ள ஆர்வம் கொண்ட உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை நான் அழைக்கின்றேன்.

இந்த நாட்டில் முதலீடுகளுக்கான நிர்பந்தம் இருப்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வெளிநாட்டு நிறுவனங் களிடமிருந்து இந்த மாநிலத்திற்கான மின் துறைக்கு முதலீடுகளை நாங்கள் வெகுவாக வரவேற்கிறோம்.

எரிசக்தியைப் பாதுகாப்பதில் தமிழக அரசு தீவிரமாகவே உள்ளது. எரிசக்தியைப் பாது காப்பதன் மூலம் முதலீட்டுத் தேவைகளைக் குறைக்கவும் சுற்றுச்சூழல் மாசுகளைக் கட்டுப்படுத்தவும் இயலும் என்பதை நாம் அறிவோம்.

வீடுகள், வேளாண்மை இடங்கள், தொழிற்சாலைகள், வர்த்தகப் பிரிவுகளில் உள்ளவர்கள் திறன் வாய்ந்த எரிசக்தி விளக்கு கள் மற்றும் பொருட்களை அதிக அளவில் வாங்க, அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

தொழிற்சாலைகளில் எரிசக்தி பயன் படுத்தியது தொடர்பாகத் தணிக்கை முறை யினைக் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

புதுப்பிக்கக்கூடிய எரிச்சக்தி ஆதாரங் களைப் பொறுத்தவரையில் அவ்வகை எரிசக்தி ஆதாரங்களை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாகவே உள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் மிகவும் முன்னணியில் உள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அமைக்கப்பட்ட காற்றாலை மூலம் 555 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி ஆகிறது. காற்றாலைகள் மூலம் தமிழகத்தில் 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்கிற நிலைமையுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 100 மெகாவாட் அதில் அதிகரிக்கும். தமிழ்நாடு மின்வாரியம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை விலைக்கு வாங்கும்.

இந்தியா மற்றும் வெளிநாட்டு வளர்ச்சி யாளர்கள் மின்சாரம் மற்றும் அதன் தொடர்பான துறைகளுக்கு இந்த மாநிலத்தில் முதலீடு செய்வதை வரவேற்கிறேன் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

மேலும், மாநிலத்தில் அமலாக்கும் திட்டத் திற்கு அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் இந்த அரசு வழங்கும்."

– முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பின் சார்பில் 11.9.1996 அன்று எரிசக்தி உச்சி மாநாடு - 96 ஐ (எனர்ஜி சம்மிட் -96) சென்னையிலுள்ள பார்க் ஷெராட்டன் அரங்கில் துவக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து.



மாணவர் பக்கம்

# அன்பு என்பது..

**ஆர். இரத்தினம்**

குடும்பத்தில் அன்றாடம் அன்பைப் பரிமாறிக் கொள்வதின் முக்கியத்தை ஒரு ஆங்கிலப்பத்திரிக்கை எடுத்துச் சொல்கிறது. ''இன்று உங்கள் குழந்தையை கட்டித்தழுவி அரவணைத்தீர்களா?'' என்று ஒரு கேள்வியை எழுப்பியது. இவ்வாறு செய்தால், குழந்தை ஆரோக்கியமாகப் பெற்றோரிடம் பாசத்துடன் வளரும். சாலை விபத்தைத் தடுக்க மேல் நாட்டில் கணவன் வீட்டைவிட்டுப் புறப்படுமுன் மனைவியை அவனுக்கு அன்பு முத்தம் கொடுத்து வழியனுப்பச் சொல்லு கின்றார்கள்.

மனிதனின் ஆரோக்கியத்திற்கு அன்பு



இன்றியமையாதது. அன்பு கிடைக்காதபோது மனிதன் நோய்வாய்ப்படுகிறான். டாக்டர் பிளாஷ்னர் என்பவர் ''நோய், அன்பைப் பெறுவதற்கு ஓர் குறுக்கு வழி'' என்று சொல்கிறார். தினமும் உணவு தேவைபோல் அன்பும் தேவை. அன்பு கிடைக்காதபோது நோய்வாய்ப்பட்டு ஒருமித்த கவனிப்பையும், அன்பையும் பெற்றுக்கொள்கிறான். முக்கியமாகப் பலவீனமுள்ளவர்களான குழந்தைகளும், பெண்களும், உணர்ச்சிகளையும், பிரச்சனைகளையும் சமாளிக்கத் தெரியாமலும், அன்பைக் கேட்கத் தெரியாமலும் நோய்வாய்ப் படுகிறார்கள். நோய்வாய்ப்பட்ட பொழுது அன்பைப் பொழியாமல், குறைவாகக் கொடுத்து உடல் நலமாக இருக்கும் பொழுது அவர்களுக்குத் தினமும் தேவையான அன்பைக் கொடுப்பது நல்லது.

## நோய்க்கு மருந்து

தொடு உணர்வு மூலம் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் பொழுது, அன்பைப் பெறுபவனுக்கு ஒருவித சந்தோஷமான உணர்வு உண்டாகிறது. வியாதியைக் குணப்படுத்தும் சக்தி அவனுள் பாய்கிறது. அதனால் சீக்கிரம் குணமாகி விடுகிறான். வியாதிகளுக்கு அன்புதான் தலைசிறந்த மருந்து. வியாதிகளைக் குணப் படுத்துவதில் 90% அன்பின் பங்கு, 10% மருந்தின் பங்கு.

வியாதி உள்ளவர்களைக் குணப்படுத்து வதில் அன்பு ஒரு பெரிய சாதனையைச் செய்கிறது. கோபமும், படபடப்புமாக இருப்பவரைச் சாந்தமாக்கி, அவருக்குள்ள இரத்த அழுத்தம், குடல்புண், வலிகள் போன்ற வியாதியைக் குணப்படுத்துகிறது. நோய்வாய்ப்பட்டு பயமோ, சோர்வோ உள்ளவர்களை அன்பு ஒரு நடுநிலைக்குக் கொண்டுவந்து கிருமிகளை எதிர்க்கும் சக்தியை உயர்த்தி, காய்ச்சல், பேதி போன்ற வியாதிகளைக் குணப்படுத்துகிறது. நோய்வாய்ப்பட்ட மனிதனை அன்பு விரைவில் குணப்படுத்த உதவுகிறது. மருந்தின் தேவை குறைகிறது.

## நன்மைகளும் உண்மைகளும்


ஒரு குடும்பத்தில் ஒரு பையன் நன்றாகப் படிக்கவில்லை, ஒரு குடும்ப ஆலோசகர் அவனைத்தன் அருகில் வைத்துக்கொண்டு அவன் கழுத்திலும் முதுகிலும் அன்பாக வருடிவிட்டு, சில கேள்விகள் கேட்டார். வருடியபின்பு, அவன் அமைதியடைந்து நடுநிலைக்குவந்து பகுத் தறிவை உபயோகப்படுத்தி நல்ல முடிவு எடுத்தான்.

கே: படித்தால் யாருக்கு நல்லது?

பதில் : எனக்கு

கே : இப்போது படிப்பது போதுமா? இன்னும் படிப்பது நல்லதா? எப்பொழுது எழுந்திருக்கிறாய்? இன்னும் அதிகாலையில் எழுந்திருக்கலாமா? அப்படியென்றால் ஒரு கால அட்டவணையைப் போட்டுக்கொள். எப்பொழுது எழுந்திருப்பது, படிப்பது, பள்ளி செல்வது, திரும்புவது, விளையாடுவது, திரும்பி வந்து படிப்பது, தூங்குவது என்று ஒரு அட்டவணையைத் தயாரித்துக்கொள். அதை நீ படிக்குமிடத்தில் சுவற்றில் ஒட்டி வைத்துக்கொள்.

இவ்வாறு கேள்விகள் கேட்ட பின்பு, அவன் நல்ல முடிவுக்கு வந்ததுபோல் செயல்பட்டான். அன்பாகச் சொல்லி அவன் படிப்பையும் எதிர்காலத்தையும் அவனிடமே ஒப்படைத்து விடுகிறோம். அடித்தோ திட்டினாலோ கேட்காத பையன் அன்புக்குப் பணிந்து செயல்பட ஆரம்பித்தான். திட்டுவது ஆணியை சம்மட்டி எடுத்து அடிப்பது போன்றது. ஆணி வளைந்து விடும். வேலை பூர்த்தி ஆகாது, சக்தியும் வீண். அன்பினால் காரியத்தை எளிதாக முடித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்யும் பொழுது ஆணியை சுத்தியலால் அடிப்பது போன்று, காரியமும் முடிகின்றது. சக்தியும்குறைவாகச் செலவாகிறது.



## மலரும், தலையும்!

மேனாட்டறிஞர் பெர்னார்டு ஷா, வண்ண மலர்களைப் பார்த்துக் களிக்கும் பழக்கம் உள்ளவர்; இதற்காகவே அடிக்கடி அவர் பூஞ்சோலைகளை நாடிச் செல்லுவதுண்டு.

ஒருநாள் அவரிடம் அவர் நண்பர் ஒருவர் கேட்டார்: "பூக்களின் மேல் இத்தனை ஆசை கொண்டுள்ள நீங்கள், உங்கள் வீட்டில் ஏன், ஒரு பூத்தொட்டிகூட வைத்துக் கொள்ளவில்லை?''

அதற்கு, பெர்னார்டு ஷா சிரித்தபடி இவ்வாறு பதில் சொன்னார்: "எனக்குச் சிறு குழந்தைகளைப் பார்த்து ரசிப்பது கூடத்தான் நிரம்பப் பிடிக்கும். அதற்காக, அக் குழந்தைகளின் தலைகளைக் கிள்ளிவந்து வீட்டில் வைத்துக் கொள்ளவா முடியும்?"


### பேயாவது பூதமாவது

குழந்தைகளுக்குக் காய்ச்சல் வரும்போது அன்று பள்ளியில் என்ன நடந்தது என்று கேட்டு பள்ளியில் ஏற்பட்ட பயத்தைப் போக்கி அன்பாக வருடியபின் காய்ச்சல் குறைந்தது. ஒரு குழந்தையிடம் ஒரு இருட்டறையைக் காட்டி 'பேய், பேய்' என்று மற்றொரு மாணாக்கன் பயமுறுத்தினான். அந்த அறையின் இருட்டுப் பகுதி விளக்கைப் போட்டு அங்கு பேய் இல்லை என்று குழந்தையிடம் நிரூபித்து அதை வருடிவிட்டபின் குழந்தையின் பயமும் காய்ச்சலும் போய்விட்டது. உடலில் பல பாகங்களில் வலி உள்ளவர்களுக்குத்-தலைவலி உள்ளவர்களுக்கு அன்பாகத் தடவிக் கொடுத்தால் அவைகள் போய்விடும்.

பெற்றோர்கள் இருவரும் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்கள். குழந்தைகளை அந்த ஊரிலேயே உள்ள சிறந்த பள்ளியில் தங்களுக்கு மீறிய செலவில் சேர்த்தனர். குழந்தைகள் வீட்டில் ஒரு உதவிகூட செய்வதில்லை. தாய் ''உங்களுக்காகப் பாடுபடுகிறேனே! உதவி செய்யக்கூடாதா?'' என்று திட்டினாள். ஒப்புக்காகச் சிறு வேலை செய்துவிட்டுப் படிப்பு இருக்கிறது என்று சென்றுவிடுவார்கள். அன்பாக நெற்றியிலும் பிடரியிலும், தோள்பட்டையிலும், முதுகிலும் வருடி உதவி செய்யச் சொன்னபோது மாங்கு, மாங்கு என்று தானாகவே வேலையைத் தேடி உதவி செய்தார்கள். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் பெருகியது.

மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர் காலையில் வேலையை ஆரம்பிக்கு முன்பு, வட்டமாகச் சுற்றி ஒருவர் பின் ஒருவராக நின்று கொண்டு மற்றவர் தலையிலும், கழுத்திலும், முதுகிலும், அன்பாக வருடிவிட்டுக்கொண்டு பின்பு வேலைகளை ஆரம்பித்தனர். அன்பாக வருடுதல் - சோர்வைப் போக்கி, வேலையை, அமைதியாகவும், சந்தோஷமாகவும் ஆரம்பிக்க உதவுகிறது.

சுருங்கச் சொன்னால், நிபந்தனையற்ற அன்பை மெய் மூலமாகப் பறிமாறிக் கொள்வது, மனித வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகவும் ஆரோக்கியமாகவும் அமையப்பேருதவி செய்யும். நினைவில் வையுங்கள்.



# நூல்நயம்

**திராவிடத் தந்தை**
**டாக்டர் சி. நடேசனார்**

ஆசிரியர் : ஏ.எஸ். வேணு
வெளியிட்டோர்:
ஜஸ்டிஸ் பப்ளிகேஷன்ஸ்
2, நாகல்மேடு,
வேகவதி நதி ரோடு,
சின்ன காஞ்சிபுரம் - 631 503.
விலை : ரூ. 5.00 பக்கம் : 52

1912 ஆம் ஆண்டிலேயே சமுதாயத்தில் மலிந்து கிடந்த உயர்வுதாழ்வு சாதிக்கொடுமைகளை எதிர்த்துப் போராடிய நீதிக்கட்சித் தூண்களில் ஒருவரான நடேசனாரைப் பற்றிய நூல் இது. தந்தை பெரியாரோடும், அறிஞர் அண்ணாவோடும் நெருங்கிப் பழகிய பெருமையாளர் நூலாசிரியர்.

**கருணையம்மன் அந்தாதி**

ஆசிரியர் : நா. பாக்கிய சுந்தரி
வெளியிட்டோர் : உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.
விலை : ரூ. 22.00

தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களுக்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு; அப்படிப்பட்டவற்றில் ஒன்றே இந்தப் பிரபந்த நூல். இதில் தேவாரத் திருத்தலங்களில் ஒன்றான அவிநாசி தலச்சிறப்புக்கு மூலகாரணம் எனக் கருதப்படும் அன்னை கருணாம்பிகைபற்றிச் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**பழந்தமிழ்க் கூத்தே பரத நாட்டியம்**

ஆசிரியர் : டாக்டர் புரட்சிதாசன்
வெளியிட்டோர் : பாண்டியன் பாசறை,
17, வடக்கு போக்கு சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
பக்கம் : 128 விலை : ரூ. 45.00

'ஆடற்கலை' முதல் 'ஆடல் அடிமை' என்பது வரையிலான பத்துத் தலைப்புகளிலான கட்டுரைகள் கொண்டநூல் இது. பரதம் தமிழ்க்கலையல்ல என்ற விவாதம் இதில் மறுக்கப்பட்டிருக்கிறது; அதுவும் தமிழ்க்கலையே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

**தமிழில் இஸ்லாமிய இதழ்கள்**

ஆசிரியர் : அ.மா. சாமி,
வெளியிட்டோர் : நவமணி பதிப்பகம்,
12, 2வது பெருஞ்சாலை,
நகர வளர்ச்சிக் குடியிருப்பு,
சென்னை - 600 004.

இஸ்லாமியத் தமிழ் இதழ்கள் ஐநூறுக்கு மேற்பட்டவை இருந்ததாகவும், அவற்றின் தமிழ்ப்பணிசமுதாயப் பணிகள் எப்படி இருந்தன என்றும் இந்த நூலில் விவரிக்கப் பட்டிருக்கிறது. 1869ல் இலங்கையில் இருந்துதான் முதல் இஸ்லாமிய இதழ்கள் வெளிவந்தன. தமிழகத்திலிருந்து 1888 முதல்தான் அவ்வாறு வெளிவரத் தொடங்கின என்பன போன்ற பல விவரங்கள் உள்ளன.

**சீதையின் சபதம்**

ஆசிரியர் : கருவூர் கன்னல்
வெளியிட்டோர் : தமிழ்ப்பாசறை,
79 தெற்கு நரசிம்மபுரம்,
கருவூர் - 639 001,
திருச்சி மாவட்டம்.
பக்கம் : 64 விலை ரூ. 12.00

இராமாணத்துச் சீதை, இராவணன் அரண்மனையில் பலதினங்கள் சிறைவைக்கப்பட்டிருந்தாள் என்று நாம் படித்திருக்கிறோம்; முடிவில், இராமன் அவளைச் சந்தேகிப்பதை அடிப்படையாகவைத்து எழுதப்பட்டுள்ள பெண்ணுரிமைப் பாவியம் இது.

**சூலூர் வரலாறு**

ஆசிரியர் : புலவர்
செந்தலை ந. கவுதமன்
வெளியிட்டோர் : பாவேந்தர் பேரவை
38. கலங்கல் பாதை
சூலூர், கோவை - 641 402.
பக்கம் : 652 விலை ரூ. 175.00

ஊர்களின் வரலாற்றை ஒருங்கிணைத்தால், நாட்டு வரலாறு முழுமை பெற்றுவிடும் என்ற நோக்கத்தில் ஏராளமான படங்களோடு தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நூலின் மூலம் கோவை வரலாற்றையும், கொங்குநாட்டு வாழ்வியலையும் பார்க்க முடியும்.

– இந்திரன்

# பனித்துளிப் பார்வைகள்



உனது பெயரை
மீண்டும் மீண்டும்
உச்சரித்த பொழுது தான்
இனிப்புக்கு இன்னொரு அர்த்தம்
இருப்பதையே
எனது நா உணர்ந்துகொண்டது!

அன்று நடந்த
கவிதைப் போட்டிக்கு
எல்லோரும் கவிதையோடு
வந்திருந்தார்கள்.
ஆனால்
நீ மட்டும்
உன் கண்களோடு வந்திருந்தாய்!

காதலுக்குக் கண்ணில்லை
என்பது பொய்.
உன் கண்களைப் பார்த்த
பிறகுதானே
உன்னை நேசிக்கத் துவங்கினேன்!

நான் இத்தனை முறை
நச்சரித்தும்
உன் உதடுகள் ஏன்
மௌனத்தையே உச்சரிக்கின்றன?

வை. இறையன்பு

# பாட்டுப் பிறந்த விதம்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

உண்மையான அழகும், மனங்கனிந்த அன்பும், செவிகளுக்கு இனிமையான ஒலிகளும் தான் என் உள்ளத்தைக் கவர்ந்த காதற் துணைவிகள். நான் கவிதை எழுத ஆரம்பிக்கு முன் - பறவை இனங்களையும், மிருக இனங்களையும், தாவர இனங்களையும் கண்டு ரசிப்பதுபோல் அன்பில்லாத முகங்களையும் அறிவில்லாத செயல்களையும் எனக்குப் பிடிக்காமற் போனதில் வியப்பில்லை என்று எண்ணுகிறேன்.

நான் நன்றாகப் பழகிய, என்னுடைய அனுபவவாயிலாகக் கண்ட நண்பர்களின் நடைமுறைகளை ஆதாரமாக வைத்துக் கவிதை எழுதுவேன். அரைவயிற்றுக் கஞ்சி குடித்தாலும் முயற்சி, ஒற்றுமை, கட்டுப்பாடு இவைகளைக் கைவிடாமல் வாழ்க்கையோடு எதிர் நீச்சலடித்துக் கொண்டு, என்றாவதொரு நாள் நாம் எதிர்பார்த்த வாழ்வு கிடைக்கும் என்று எண்ணி, மனங்கொண்டது மாளிகையாக மரத்தடியே வீடாக வாழும் மக்களைப்பற்றி என் உள்ளம் அதிகமாக ஆராயும் தகுதியைப் பெற்றிருக்கிறது. அழகிய பூங்காவிலும் பெருங்காடுகளிலும் வயல் வெளிகளிலும் வாழும் பறவை இனங்களும் என் மனதைக் கவருவதுண்டு. அவைகள் இரை தேடிவந்து தம் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுவதைக் கண்டு மெய்மறந்து ரசிப்பேன். அவைகள் கொஞ்சிக் குலவிக் கத்தும் ஒலிகள் நான் எந்த வாத்தியத்திலும் கேட்டறியாத இனிய கீதங்களாகும். இவைகள்தான் நான் அமைக்கும் கவிதைகளுக்கு மூலகாரணங்களாகும்.

''சங்கம் படைத்தான் காடு'' என்ற எங்கள் நிலவளம் நிறைந்த சிற்றூரைச் சேர்ந்த துறையான் குளம் என்ற ஏரிக்கரையில், நான் ஒரு நாள் வயல் பார்க்கச்சென்று திரும்பும்போது வேப்பமரநிழலில் அமர்ந்தேன்; நல்ல நிழலோடு குளிர்ந்த தென்றலும் என்னை வந்து தழுவவே எதிரிலிருக்கும் ஏரியையும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தேன். தண்ணீரலைகள் நெளிந்து நெளிந்து ஆடிவர, தாமரை மலர்கள் 'எம்மைப் பார்! எம் எழிலைப்பார்!' என்று குலுங்க, ஓர்இளங்கெண்டை பளிச்சென்று துள்ளிக் கரையோரத்தில் கிடந்த தாமரை இலையில் நீர் முத்துக்களைச் சிந்தி விட்டுத் தலைகீழாய்க் குதித்தது. அதுவரை மௌனமாக இருந்த நான் என்னையும் மறந்தவனாய்ப் பாடினேன். இதுதான் அது:

**'ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை**
**ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே**
**தூண்டிக்காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத்**
**துள்ளிக் குதிக்காதேகெண்டைக் குஞ்சே'**

இதை அங்கு ஆரம்பித்த நான் வீடுவரும் வரை பாடிக்கொண்டு வந்தேன். எல்லோரும் அதைப் பலமுறை பாடச் சொல்லி மிகவும் ரசித்தார்கள். எனக்கு அப்போது 15 வயது (1946). பாடல் இலக்கணங்கள் எப்படியென்று அறியாத நேரம் அது. எல்லோரும் ரசித்ததிலிருந்து, 'ஓகோ, இப்படித்தான் பாடல் எழுத வேண்டும் போலிருக்கிறது' என்று சிந்தித்த நான் அன்று முதல் சுவையான நிகழ்ச்சிகள், பறவை இனங்கள், அழகிய காட்சிகள், அறிஞர்கள், மடையர்கள், இன்னும் மாடுகள், ஆடுகள், நாய்கள் எல்லாவற்றையும் பற்றி வேடிக்கையாகப் பாடுவதுண்டு.

நான் சென்னையில் தங்கியபின் மயிலாப்பூர் கோவிலுக்குள் ஒரு நாள் நண்பர்களின் வற்புறுத்தலின் மீது சென்று சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது, நற்பண்பும், குடும்பத்திற்கேற்ற

அடக்கமும் நிறைந்த ஒரு இளம் பெண், பயமும், பக்தியும், நாணமும் கொண்டு கோவிலை வலம் வரும் நேரத்தில், இறை வணக்கம் செய்யவந்த ஒருவர், வந்த பணியை மறந்து அவளையே முறைத்தபடி நின்று கொண்டும் நடந்து கொண்டும் இருந்தார். என் நண்பர்களும், இவைகளை இலேசாகக் கவனித்தவாறே 'இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நீர் பாடுவீரா?' என்று என்னைக் கேட்கவே நான் பாடினேன்.

**'சீவி முடித்துத் திருமணக்கும் பொட்டு வைத்துக்**
**கோவிலைச் சுற்றிவரும் குலமகளே - பாவியரின்**
**கண்ணிலகப்பட்டுக் களங்கம் வராவண்ணம்**
**உன்னை நீ காப்பாற்றிக் கொள்'**

என்றேன். இதைக்கேட்ட சிலர் புகழ்ந்தனர். என்னுடன்சதாவாய்ச்சண்டை போடும் நகைச்சுவை நண்பனொருவன், 'தப்போ சரியோ, என்னமோ நீ பாடுறே, நாங்க கேக்கிறோம்' என்றான். நான் மீண்டும், 'தப்போ சரியோ, நானிப்பாவைப் பாடிவிட்டேனப்பாடி என்று புகழ்ந்தாலும், இல்லை அடப்பாவி என்று கடித்தாலும் சரியே' என்று பாடினேன்.

தியாகராயநகர் வாணிமகாலுக்கு அருகில் நான் நடந்து வந்து கொண்டிருந்தேன். காலில் அணிந்திருந்த செருப்பில் ஒன்று அறுந்துவிட்டது. இணைபிரியாத அவைகளைக் கையிலெடுத்துக் கொண்டு மீண்டும் நடந்தேன். என் பழைய நண்பர் ஒருவர், 'என்ன ஓய் பட்டுக்கோட்டை! தார் ரோடு ரொம்பக் குளிர்ச்சியாய் இருக்கா?' என்று கிண்டலாகக் கூறியதும் எனக்குச் சிறிது ஆத்திரமாக வந்தது. உடனே அவரை அருகில் அழைத்து இதைப்பாடினேன்.

**'உறுப்பறுந்து போனாலும் உள்ளங் கலங்கானிச்**
**செருப்பறுந்து போனதற்கோ சிந்திப்பான் - நெருப்பை**
**எதிர்ப்பதற்கும் அஞ்சாத எண்ணம் படைத்தாற்பின்**
**கொதிக்குமிந்தத் தார்குளிர் நீர்.'**

என்று பாடினேன். இதைக்கேட்ட அவர் இப்பொழுது என் அரிய நண்பர்களில் ஒருவராக



இருக்கிறார். நான் நாடகங்களுக்கு என்றும் சினிமாவுக்கென்றும் எழுதியுள்ள பாடல்கள் அனைத்துமே ஒவ்வொரு காரணத்துடன்பிறந்ததாக இருக்கும். ஒரு சில சான்று: பனகல் பார்க் என்று தியாகராய நகரிலே ஒரு பூங்கா இருக்கிறது. அதில் நான் சிந்தனை செய்வதற்கென்றே போய் உட்காருவேன். ஒருநாள் ''சக்ரவர்த்தித் திருமகளில்'' பாடல் ஒன்று எழுதக் கேட்டிருந்தபடியால் பொதுவாகவும் எல்லோரும் பாடலின் கருத்தில் அங்கம்வகிப்பவர்களாகவும் பாடல் அமைந்தால் நல்லது என்று நான் சிந்திக்கும் வேளையில், பூங்காவில் பேசிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், 'அவன் குணம் அப்படி இவன் குணம் இப்படி; அதுக்கு ஆரென்ன செய்யறது' என்று அவர்களுக்குள் எழுந்த வார்த்தை என் செவிகளில் விழவே, 'ஆமாம் மனிதனின் குணம் எப்பொழுது மாறுகிறது? இருந்த குணம் எப்பொழுது பிரிந்து போகிறது? மீண்டும் மனிதனுடன் எப்பொழுது வந்து சேருகிறது!' என்று ஆராய்ச்சி பண்ணியவாறே உமா பிக்சர்ஸுக்குச் சென்று மாடியில் அமர்ந்தேன்.

பூனை ஒன்று என் பக்கத்தில் நின்றது. ''உறங்கையிலே பானைகளை உருட்டுவது பூனைக் குணம்'' என்று தொகையறாஒன்றைஆரம்பித்தேன். பூனைக் குணம், குரங்குக் குணம், முதலைக் குணம் எல்லாம் சொல்லி, முடிவில் இத்தனை குணங்களும் மனிதனிடம் மொத்தமாய் வாழுதடா என்று தொயைறாவை முடித்து, மனிதன் பொறக்கும் போது பொறந்த குணம் போகப்போக மாறுது - எல்லாம், இருக்கும்போது பிரிந்த குணம் எறக்கும்போது சேருது. (இறக்கும்போது) மனிதன் உயிர்போகும் போது எவ்வளவு கொடியவனாக அவன் வாழ்க்கையில் வாழ்ந்திருந்தாலும் உயிர்போகுமுன் ஒரு நிமிடத்தில் தன் வாழ்க்கையில் செய்த தவறுகளைச் சிந்தித்து உணருகிறான்; அவனைப் பிரிந்திருந்த குணமும் அப்போதுதான் அவனைச் சேருகிறது; ஆனால் உடனே மூச்சு நின்று

விடுகிறது; அவன் தான் உணர்ந்ததை மற்றவர்களுக்குச் சொல்லக்கூட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறான் என்ற இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பாடலை முடித்தேன்.

இதுபோல சினிமாப் படங்களிலே வரும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு பாடலை அமைத்தாலும் அவைகள் நாட்டுக்கு நல்ல உண்மையை - நீதியைக் கூறும் வகையில் பின்னணியில் ஏதாவது முக்கியக் கருத்தைக் கொண்டு மிளிர வேண்டும். அதற்காக இலக்கியங்களைப் புரட்டுவதைவிட, என் அன்றாட வாழ்க்கையில் நான் சந்திக்கும் உண்மையான வாழ்க்கையை, இயற்கைக்கும் மனிதருக்கும் உள்ள தொடர்பை, உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் உள்ள பிணைப்பைத் தழுவி பாடல்களிலே கொண்டு வருவேன்.

இப்படி ஒரு பாடலைப் பற்றிச் சிந்திக்கும்போது, அந்த நேரத்தில் சூழ்நிலை எப்படி இயக்குகிறதோ, எப்படி கவிஞனுக்கு ஒத்துழைக்கிறதோ அதிலிருக்கிறது பாட்டின் உயர்வு. தனியாக இருப்பதையே விரும்பாத நான் எங்கும் எல்லோருடனும் அன்பாகப் பழகும் நான் - எழுதத் தொடங்கியதும் தனிமையை விரும்புவேன், ஆனால் அங்கங்கே உட்கார்ந்து, அடைபட்டுக் கிடந்து வேண்டுமென்றே கருத்துக்களைத் தேடுவதைவிட, சுதந்திரமாகக் கட்டுப்பாடு இன்றி நிமிர்ந்த நடையுடன், பார்வையை எங்கும் திருப்பிச் சிந்தனைப் புலன்களைக் குறுக்காமல் விசாலமாக்கிக் காணும் போதுதான், இயற்கையிலேயே கவிதைகள் உதிரும், பாடல்கள் உயிருடன் பிறக்கும், சில பாடல்களைப் போலச் செத்துப் பிறக்காது. இதுதான் என் கருத்து. இதை நான் மற்றவர்களுக்காகக் கூறவில்லை. என்னால் முடிந்தவரை மேற்கூறிய முறைகளைக் கையாளுவேன். எழுதுவதைவிட எழுதாமல் உணர்ச்சியோடு உற்சாகத்தோடு பாடவேண்டும். பாடியபின் எழுத வேண்டும். இப்படி எழும் பாடல்கள் எக்காலத்திலும் சாகாது. ●

***– 13.4.1930ல் பிறந்து, 8.10.1959ல் மறைந்த கவிஞரே 'பேசும் படம்' இதழில் எழுதியது.***

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
– புரட்சிக்கவிஞர்


# கவிதைப் போட்டி

கற்பனையும் சிந்தனையும் கைகோத்து
நடனமிட அற்புதக் கவிபடைக்கும்
அனைவருக்கும் நல்வாய்ப்பு; இதோ,
'தமிழரசு' கவிதைப் போட்டிக்கு
அழைப்பு;

**'இன்றுபோல் என்றும் இரும்'**

– இதுதான் கவிதைத் தலைப்பு;
உரிய பரிசுகள் காத்திருக்கின்றன!
உங்கள் கவிதைகள் வந்து
சேர வேண்டிய


**கடைசி நாள் 16.11.1996**

உங்களுடைய படைப்பு -
மரபுக்கவிதையாகவோ,
புதுக்கவிதையாகவோ இருக்கலாம்;
வரி வரையறை: 16
வெல்லும் கவிதைகள் வெளியாகும்
இதழ் 1.1.1997

தேர்வு பெறாதவற்றைத் திரும்ப
அனுப்ப இயலாது; நகலெடுத்துக்
கொள்ளவும்.

*கவிதை அனுப்பவேண்டிய முகவரி:*

ஆசிரியர் : **'தமிழரசு'**
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம் - அண்ணா சாலை,
சென்னை - 600 002.



மருத்துவம்

# தாய்ப்பால்

**டாக்டர் சி. இராமகிருஷ்ணன்**


இன்றைய நாகரிக உலகில்கூட, ஒரு குழந்தையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஆவல் ஒவ்வொரு பெண்ணுக்கும் இருப்பதை நம்மால் காணமுடிகிறது; ஆனால், அதே நேரத்தில் - பெற்ற குழந்தையைப் பேணிக் காப்பதில் இக்காலத் தாய்மார்கள் எல்லோருக்குமே அத்தனை ஆர்வமிருப்பதாக நாம் சொல்லமுடியாது.

அவ்வாறு இருக்குமேயானால் – வீதிக்கு வீதி குழந்தைகள் காப்பகம் எப்படி வந்திருக்கும்? வசதி மிக்கவர்கள் வீட்டிலெல்லாம் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுவதற்கென்றே எப்படி ஒரு வேலைக்காரி நியமிக்கப்படுவாள்? அவள் சிறுமியாகத்தான் இருப்பாள் என்பதுகூட அல்ல; தான் பெற்ற குழந்தைக்குப் பாலூட்டும் அளவில் வயதுள்ளவளாகப் பார்த்து அந்த வேலைக்காரி நியமிக்கப்படுகிறாளே, அதெப்படி?

### தாய்ப்பால் மறுப்பு ஏன்?

இதற்கெல்லாம் ஒரே விடை, என்னதான் ஒருத்தி பிள்ளைப்பேறு அடைந்தாலும்கூட, தன்னுடைய கட்டுமஸ்தான உடல் கட்டழகு இழந்துவிடக் கூடாது என்பதில் அவள் கருத்தாக இருக்கிறாள் என்பதுதான்.

இதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு விஷயம் - பிறந்த குழந்தைக்குத் தாய்பால் கொடுக்கும் பட்சத்தில், தன்னுடைய மேனியழகு குறைந்துவிடும்; பருவ மெருகு குலைந்துவிடும் என்பதிலே பெரும் பாலான இளம் பெண்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். ஆனால் இது நல்லதல்ல!



தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பது அவளுக்கு நல்லதா என்பதைவிட, தாய்ப்பால் குடிக்காமல் இருப்பது அந்தக் குழந்தைக்கு நல்லதா என்று பார்ப்போமேயானால் - கொஞ்சம் கூட நல்லதல்ல.

ஏன் இதைச் சொல்லுகிறேனென்றால், குறிப்பிட்ட பெண்மணிக்குப் பிறந்த குழந்தைக்குஏறத்தாழ ஆறு மாத காலம் வரை தாய்ப் பால் ஒன்றுதான் தகுந்த உணவாக அமையும்; திட உணவைவிட அந்தத்திரவ உணவே அக்குழந்தைக்கு அதிகச் சக்தியளிக்கும்; உணர்ச்சி பூர்வமான பாதுகாப்பையும் அளிக்கும்.

அதற்கு இணையான சரிவிகித உணவு - புட்டிப் பாலிலோ, பவுடர் பாலிலோ, பசும்பாலிலோ கிடைக்கவே கிடைக்காது.

### இலக்கியத்தில் தாய்ப்பால்

இலக்கிய மேதைகளுக்கு ஒன்று நினைவிருக்கும்; முதுகில் காயம்பட்டு இறந்தான் தன் மகன் என்று கேள்விப்பட்ட தாயானவள், ''இந்தக் கோழைக்கோ நான் பால் கொடுத்து வளர்த்தேன்?'' என்று கேட்டுத் தன் மார்பகத்தையே வெட்டிக் கொள்ள வாளெடுத்தாளாம்!

தாய்ப்பால் எத்தனைச் சக்தி மிக்கதென்பதை அதிலிருந்தே அறியலாம்.

மாவுச்சத்து, கொழுப்புச் சத்து, தாது உப்புகள், உயிர்ச்சத்து எல்லாமே தாய்ப்பாலில்தான் சம அளவில் இருக்கிறது. நோய் எதிர்ப்புச் சக்தி மிக்கதான புரதமும் தாய்ப்பாலில் அதிகம் உண்டு; அதுதான் பச்சிளங் குழந்தையின் பாதுகாப்பு அரணாக அமையும்.

தாய்ப்பாலில் உள்ள தன்னிகரற்ற சக்தியினால் - ஒவ்வாமை அடிப்படையிலான ஆஸ்துமா, படைபோன்ற எந்த நோயும் குழந்தைக்கு வராது. தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு, புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, எதிர்ப்புச் சக்தி மிகுவதால் அதிகமிருக்கும்; அதிலிருந்து குலக்கொழுந்தை மீட்கத் தாய்ப்பாலே தக்கதோர் முக்கிய மருந்தாகும் என்பது மருத்துவ உண்மையாகும்.

பச்சிளம் குழந்தைக்கு வேறெந்த உணவு செறிக்கிறதோ இல்லையோ, தாய்ப்பால் விரைவில் செறித்துவிடும். அழகும் ஆரோக்கியமும் மிகுதியாகும். சில தாய்மார்கள் தமக்கு முதல் மூன்று நாட்கள் சுரக்கும் சீம்பாலைக் கொட்டிவிடுவார்கள்; குழந்தைக்குத் தரமாட்டார்கள். இது சரியல்ல; இளம் மஞ்சள் நிறமுள்ள சீம்பால் எனக்கருதப்படும் அந்தத் தாய்ப்பாலில்தான், குழந்தைக்கு ஏற்படக்கூடிய எந்தவித நோயையும் எதிர்த்துத் தவிடுபொடியாக்கும் தனிச் சக்தி உள்ள தென்பதை அவர்கள் உணரவேண்டும்.

### அடுத்த குழந்தை

முழுமையான இயற்கை உணவான தாய்ப்பால் ஊட்டுவதால் தாய் தன் அன்பை வெளிப்படுத்துவது மட்டுமல்ல; தாயினுடைய கருப்பையானது நல்லபடி சுருங்கி, மீண்டும் முன்போன்ற நிலைக்கு வரும். சீக்கிரமே மறுபடி கருத்தரிக்கும் நிலைமையும் தாய்ப்பால் தருவோர்க்குத் தாமதமாகும். பிறந்த குழந்தையும் தாய்ப்பால் குடிப்பதால் நல்ல உடல் நலத்தோடு வளரும்!

மார்பகப் புற்றுநோய் பெரிதும் பெண்களுக்கே வரும் என்று கண்டறியப்பட்டுள்ளது; தாய்ப்பால் தரும் பெண்கள், இந்த அபாயத்திலிருந்தும் எளிதில் தப்ப தாய்ப்பால் தரும் பழக்கம் துணைநிற்கும்.

பிறந்த குழந்தைக்கு, முதல் ஏழு மணி நேரத்திற்குச் சப்பும் சக்தி அதிகமாயிருக்கும்; தாயானவள், அந்த நேரத்தில் தாய்ப்பால் புகட்டத் தவறிவிடக்கூடாது. அப்படிச் செய்கிற தாய்க்குத்தான், வற்றாது தாய்ப்பால் சுரக்கும் நிலை, பிறகு ஏற்படும்.

ஒவ்வொரு மார்பிலும் 5 நிமிடங்கள் வீதம் ஆரம்பத்தில் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். பிறகு இந்தக் கால அளவு படிப்படியாகப் பெருகி, 20 நிமிடங்கள், அதாவது ஒவ்வொரு மார்பிலும் 10 நிமிடங்கள் என்ற கால அளவில் பாலூட்ட வேண்டும். பால் அதிகமாக இருந்து, குடிக்கும் குழந்தையும் விரைவாகக் குடிப்பதால் கால அளவு குறைவாக இருந்து குடிக்கும் குழந்தையும் மெதுவாகக் குடித்தால் கால அளவு நீடிக்கலாம். இருந்தாலும் சராசரி பாலைக் குடிக்கும் கால அளவு மொத்தமாய் 20 நிமிடங்கள் என்று கணக்கு எடுத்துக்கொள்ளலாம்.

பூரண ஆகாரம் கிடைக்க ஒரு குழந்தைக்குச் சுமார் 5 நிமிடங்கள் முதல் 7 நிமிடங்கள் வரை போதும். இவ்வாறு ஒரு வேளை பூரண ஆகாரம் பெற்ற குழந்தை குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் அழாமல் இருக்கும். எனினும் குழந்தைக்குப் பசி தோன்றினால் தான் பால் கொடுக்கவேண்டும். நேரக்கணக்குப் பார்த்துக் கொண்டு குழந்தை கதறி அழும்வரை பொறுத்திருப்பது தவறு. குழந்தைக்குத் தேவையான போதெல்லாம் பால் புகட்ட வேண்டும்.

'அழுகிற குழந்தையே பால்குடிக்கும்' என்பதை யெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் யோசிக்கக்கூடாது. அதோடு எவ்வளவு நேரம் குழந்தை குடிக்கிறதோ, அவ்வளவு நேரம் பால் கொடுக்கலாம்.

## பால் தரும் நேரம்

மார்பில் பால் நிறைய இருப்பதாக உணரும் தாயானவள், குழந்தை பால் குடிக்கும் இடைவேளை 3 மணி நேரத்திக்கு அதிகமாகாமல் பார்த்துககொள்ள வேண்டும். பால் பருக வேண்டிய நேரத்தில் குழந்தை உறங்கிக் கொண்டிருந்தாலும் எழுப்பிப் பால் கொடுக்கவேண்டும். பால் கொடுக்கும் பொழுது, குழந்தையின் பால் சப்பும் நேரம் குறையும் பொழுதோ, அல்லது பால் குறைந்து மார்பகம் மிருதுவதாகும் பொழுதோதான் தாய் ஒரு மார்பகத்தை மாற்றி, அடுத்த மார்பகத்திலிருந்து பால் கொடுக்கவேண்டும்.

தாய்ப்பாலைத் தினசரி தொடர்ந்து கொடுக்கிறவர் களுக்குத்தான் தாய்ப்பால் சுரப்பு இருக்கும்; பால் சுரக்கும் காலமும் நீடிக்கும். ஒரு தாயின் பால் சுரக்கும் காலத்தைப் பொறுத்தே குழந்தையினுடைய வளர்ச்சியும் நல்வாழ்வும் இருக்கும்.

சிலர், வீட்டு வேலைகளைக் கவனித்தவாறே பால் கொடுப்பார்கள்; இது தவறு.

தாய்ப்பால் ஊட்டிய சில நிமிடங்களில் குழந்தைகள் வாந்தி எடுக்கும். குழந்தை பால் உறிஞ்சும்போது காற்றும் உட்செல்வதுதான் இதற்குக் காரணம். இதை அறியாத வர்கள் மருந்து மாத்திரைகளைத் தேடவேண்டியதில்லை; தாய் அந்தக் குழந்தையைத் தவறான முறையில் வைத்துப் பாலூட்டுவதே காற்று உட்புகக் காரணம்.

## எப்படிப் பால் தருவது?

குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது குழந்தையைச் சரியான நிலையில் வைத்துப் பால் கொடுக்க வேண்டும். பாலூட்டும்போது நிமிர்ந்து நின்றோ அல்லது



சாய்ந்து இருந்தோ பால் தரவேண்டும். அதுதான் சரியான முறை.

தாயின் ஒரு மார்புடன் குழந்தையின் மார்பும் குழந்தையின் தாடை தாயின் மார்புடன் இணைந்தும், மார்பகத்தின் கழுத்துப் பாகத்தில் பெரும் பகுதி குழந்தையின் வாயில் இருக்குமாறும் வைத்துப் பால் புகட்ட வேண்டும். பால் தருவதற்கு முன் கருத்த நுனிப்பகுதியை லேசாக அழுக்கிச் சிறிது பாலை வெளிப்படுத்தினால், கழுத்துப் பகுதி மென்மை அடையும். இதனால், குழந்தை இப்பகுதியை எளிதில் வாயில் கவ்வ இயலும்.

தாய்மார்கள், வலது பக்கம் பாலூட்டும்போது வலதுகை குழந்தையின் முதுகுப்புறமாகக் கீழ்நோக்கிச் செல்ல வேண்டும். அதே வேளையில் வலது கையில் முழங்கைக்கு அடுத்த முன்பகுதியில் குழந்தையின் கழுத்தை ஆதாரமாகப் பிடிக்க வேண்டும்.. குழந்தையின்

தலைப்பகுதி உயர்ந்தும் கால்பகுதி தாழ்ந்தும் இருக்கவேண்டும். குழந்தையினுடைய பின்பக்கம் வளைந்திருக்க வேண்டுமே தவிர, முன்பக்கம் வளையக்கூடாது. இவ்வாறு பால் ஊட்டும்போது உட்செல்லும் காற்றைத் தடுக்கலாம்.

**பால்தரக்கூடாதவர்கள்!**

இரத்தச்சோகை, இதயநோய், அம்மை, நிமோனியா, காசநோய் போன்ற நோய் ஏதேனும் உள்ள தாய்மார்கள் குழந்தைக்குப் பாலூட்டக் கூடாது. அதனால் அந்த நோய்கள் குழந்தைக்குத் தொற்றலாம். மேலும், குழந்தைக்குப் பால் ஊட்டுவதால் ஏற்கெனவே நோயால் தளர்ந்த தாயினுடைய உடல் மேலும் தளர்ச்சியடையக் கூடும். வலிப்போ, மனக் கோளாறோ உள்ள பெண்களும் குழந்தைகளுக்குப் பால்தரக் கூடாது. அதேபோலப் பால்தரும் மார்பகத்தில் கட்டிகளோ, வெடிப்போ ஏற்பட்டிருந்தாலும் குழந்தைகளுக்கு நல்லதல்ல.

சரியான எடையோடும், நலத்தோடும் குழந்தை வளரும் வரையில் எந்த ஒரு தாயும் பாலூட்டலாம். நான்கைந்து மாதத்தின்பின் மற்ற உணவுகளையும் சிறிது சிறிதாக ஊட்டத் தொடங்கலாம். அதுபோன்ற நிலையில், குழந்தை தானாகவே தாய்ப்பாலை மறக்கத் தொடங்கும்; தாய்க்குப் பால் ஊறுவதும் குறையும்.

பிள்ளை பெற்ற பெண்மணிக்குத் தாய்ப்பால் போதுமான அளவில் சுரக்காத பட்சத்தில் உணவில் கவனம் செலுத்துவது நல்லது.

அவ்வப்போது உணவில் துவரம்பருப்புடன் முருங்கைக்கீரை சேர்த்து உண்ணலாம். காலையில் ஆழாக்குப் பசும்பாலில் பாதாம் பருப்பும் கற்கண்டுத் தூளும் சேர்த்து இரண்டு மூன்றுநாள் குடிக்கலாம். அசைவம் சாப்பிடுவோரானால் முட்டை, மீன், சுறாமீன் குழம்பு, சுறாப் புட்டு என அடிக்கடி உணவோடு சாப்பிடலாம். இன்னும் சாதாரணமாகச் சொல்வதனால், கொஞ்சம் வெற்றிலைகளை எடுத்து வாட்டி மார்பகங்களில் வைத்துக் கட்டிக்கொண்டாலேகூட போதும். தாராளமாகத் தாய்ப்பால் சுரக்கும்.

**தாய்ப்பால் நிலை**

குழந்தைக்குப் பாலூட்டும் தாய் தன் உடலையும் சுத்தகமாக வைத்திருக்க வேண்டும். நல்ல ஓய்வுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும். ஒவ்வொரு முறை பால் தரும் முன்பும் பின்பும் மார்பகங்களையும் கைகளையும் கழுவி சுத்தமாகத் துடைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் காம்புகளில் கசிந்து காய்ந்த பாலில் நோய்க் கிருமிகள் ஒட்டியிருக்கக்கூடும்; அது பாலோடு குழந்தையின் வாய்க்குள் சென்றுவிடலாமல்லவா?

எனவே, கழுவிய பின் மார்பகங்களை லேசாகப்பிதுக்கி ஒன்றிரண்டு சொட்டுப் பாலை வெளியேற்றிவிட்டு அதற்குப் பின்னர் வரும் பாலையே குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். மேலும், மார்பங்களை நன்றாகக் கசக்கிவிட்டுக்கொண்டு புகட்டினால், பால் தங்கு தடையின்றிச் சுரக்கும்; பாலின் தரத்தையும் அளவையும் அதிகரிக்க நல்ல சத்துள்ள உணவுகளையே தாய்மார்கள் சாப்பிட வேண்டும். கீரைகள், பழவகைகள், பருப்பு வகைகள் அதிகம் சாப்பிட வேண்டும். நாளொன்றுக்கு இரண்டு டம்ளர் பால் அருந்த வேண்டும். ஒருநாள் விட்டு ஒரு நாளாவது முட்டை சாப்பிட வேண்டும். நாள்தோறும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடிக்கவேண்டும். இவ்வாறெல்லாம் செய்தால் தாய்ப்பால் சுரத்தலில் தட்டுப்பாடு இருக்காது.

***18 வயது வரையில், பெண்களுக்கு இனப்பெருக்க உறுப்புகளின் வளர்ச்சி மட்டுமே; அதன் பிறகுதான் கருத்தரிக்கும் சக்தி அதிகமாகும். 30 வயது வரையிலே இந்தச் சக்தியானது மிகவும் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அந்த வயதிற்கு மேல் கருத்தறிக்கும் ஆற்றல் குறையும். இருந்தாலும்கூட 48 வயது வரையில் பெண்கள் கருவுறக் கூடும்.***

***சிலருக்குப் பத்து மாதத்திற்கு முன்னாலும் குழந்தைபிறக்கும் சாத்தியம் உண்டல்லவா? அதேபோல் கருவுறல் முடியும் கால அளவிலும் ஓராண்டு ஈராண்டு கூடுவதும் உண்டு.***

***ஒரு பெண்ணானவள் முதன்முதல் கருவுறுகிறாளென்று வைத்துக்கொள்ளுங்கள். 2 ஆம் மாதம் முதலே அவளுடைய மார்பகம் சற்றுப் பருமனாகத் தொடங்கும். கருவுற்ற நாள்முதலே அவள் மார்பகங்களில் தாய்ப்பால் சுரக்கும் மாறுதல் ஏற்படத் தொடங்கும். 3 ஆம் மாதத்திலிருந்து பால் போன்ற திரவம் சுரக்கும்.***


***மாத விலக்குக் காலங்களில், கருவுற்ற பெண்களின் மார்பில் ஒருவகை விறுவிறுப்புத் தன்மை இருந்துகொண்டே இருக்கும். அவளுடைய மார்புக்காம்புகள் முன்பிருந்ததைவிட இன்னும் கருஞ்சிவப்பாகவோ, கருப்பாகவோ மாறும்; சற்றுத் தடித்தும் காணப்படும்.***

# தஈ

## தோப்பில் முகமது மீரான்



கலா தொலைக்காட்சிப் பெட்டியில் இராணுவ உடையுடன் தோன்றிய நபரை சதாம் உசேன் என்று யாரோ சுட்டிச்சொன்னதை செவியுற்ற அப்துல் காதர் மகன் பட்டாளம் அகம்மதுக் கண்ணு சாகிபுக்கும் தம் வீட்டில் ஆணியில் தொங்கும் பழைய இராணுவ உடையை அணிந்து நடக்கவேண்டுமென்ற ஆசைமேலிட்டது. இந்தியாபாகிஸ்தான்போர் நடந்துமுடிந்த பின் இராணுவத்தை விட்டு வந்த ஜவான் ஒருவர் சுழற்றி வீசி எறிந்த இராணுவ உடையை அவருடைய மனைவி பட்டாளம் அகம்மதுக் கண்ணு சாகிபுக்கு அவர் உடம்பில் துருத்தி நிற்கும் எலும்புகளை மறைப்பதற்காகக் கொடுத்தாள். அவரோ பல கல்யாண அவசர வீடுகளில் சாப்பாட்டுக்குச் செல்லும் போதும், பல நோன்பு பெரு நாட்களுக்குப் பள்ளி வாசலுக்குச் செல்லும் போதும் மட்டும் பயன் படுத்தி வந்த அந்த இராணுவ உடையை வளை




குடா போர் துவங்கிய பின், எப்போதும் அணிந்து நடந்து கிராம மக்களையும் தம் காலில் மொய்க்கும் ஈக்களையும் பயமுறுத்த நினைத்தார்.

எலும்புகள் துருத்தி, வியர்வையில் பொதுமி, புழுதி ஒட்டிய உடம்பில் கிழிந்த கால் சட்டைக்கு மேல் இராணுவ உடையை அணிந்து காலையில் வழக்கம்போல் மூன்று ரோடுகள் ஒன்றுகூடும் சந்திப்பில் வந்து அட்டன்ஷனாக நின்றார் பட்டாளம் சாகிபு. அவருடைய கையில் எப்போதும் கொண்டு நடக்கும் பூவரசின் கம்பைத் துப்பாக்கியென நினைத்துத் தரையில் ஊன்றியபடி தலை நிமிர்ந்து அட்டன்ஷனாக நின்றார். முக்கி முனகி வந்து போகும் வாகனங்கள் திரும்புவதும் சற்று நேரம் நின்று களைப்பாறுவதும் அந்தச் சந்திப்பி லாகும். அந்தச் சந்திப்பின் பெயர் 'கார் ஸ்டாண்டு'

கார் ஸ்டாண்டின் காவல் வீரனாகப் பட்டாளம் சாகிப் சுயம் பதவி பிரமாணம் செய்து வெகு காலங்களாகிவிட்டன. அவரு டைய தற்காப்புக்காகக் கையில் வைத்திருக்கும் துப்பாக்கி தோளுக்குச் செல்லும் போது அது வழியாக ஏதேனும் ஒரு வாகனம் புகை கக்கிக் கொண்டு கடந்து செல்லும். அல்லது, மணி கிலுக்கிக் கொண்டு ஏதேனும் சைக்கிள், குடைமணி குலுக்கும் மாட்டு வண்டி இத்யாதி...

தொலைவிலிருந்து சீறி வரும் ஒரு பஸ்ஸுக்குச் சந்திப்பில் நின்றபடி கையைக் காட்டி வருவதற்கு அனுமதி கொடுத்தார், அவர்.

''வா...வா பயப்படாதெ. நான் தாண்டா நிக்குறேன்...''

சந்திப்பில் வந்து நின்ற பஸ்ஸிலிருந்து

சிலர் இறங்கினர். உடன் பட்டாளம் சாகிபு தோளில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கக்கத்தில் இடுக்கியவாறு ஒரு கட்டளை பிறப்பித்தார்.

''டேய், ஆளெ எறக்கீட்டு போனா போரும்...'

பஸ்ஸிலிருந்து ஆட்கள் இறங்குவதற் கிடையே கிடைத்த சிறு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் பட்டாளம் சாகிபு. 'மாம்பட்டை' முக்கு முட்டெ குடிக்கும் டிரைவரின் கண்களிலிருந்து தப்பி வந்து பஸ்ஸின் பக்கவாட்டிலுள்ள ரப்பர் ஹாரனை அழுத்தி அமுக்கியபோது பூவாம்... பூவாம் ஒலி.

இரத்தக் கண்களுள்ள மாம்பட்டை டிரை வரின் ஓங்கிவிழும் கைக்குப் பயந்து குதித்து ஒரே ஓட்டம். பழைய இடத்தில் வந்து தோளில் துப்பாக்கி ஏந்தி பழையபடி அட்டன்ஷனாக நின்றார். டிரைவரைப் பார்த்து காவி நிறமான பற்களை இளித்துக் காட்டினார் – சிரித்தார்.

டிரைவர் பஸ்ஸை எடுக்க முற்படும்போது உரக்கெ ஒரு கட்டளை ''போட்டு... போட்டு...''

பஸ் புறப்பட்டுச் சென்ற பின் மீண்டும் தோளிலிருந்து துப்பாக்கியை எடுத்து முன் போல் தரையில் ஊன்றியபடி அட்டன்ஷனாக நின்று நாலு பக்கமும் பார்வையைச் செலுத்தினார், ஒரு திசை காவலாளியாக.

மூன்று ரோடுகள் சந்திக்குமிடத்தில் ஒரு மலடியைப்போல் நிற்கும் மின்கம்பத்தில் விளக்கு எரிந்து ஆண்டுகள் கப்பலேறிவிட்டன. டியூப் விளக்கைப் பொதிந்துள்ள பெரிய கண்ணாடிக் கூண்டு, லட்சோப லட்சம் புற்றீசல் களின் சவக்கிடங்காக மாறியும் காலம் கொஞ்ச மாகிவிட்டன.

நீண்ட தாடி வளர்த்தி, ஜடை பிடித்த தலை முடியைச் சுற்றி காவித் தலைப்பாகை கட்டிய முத்துச்சாமியின் பெட்டிக் கடை ஒன்று மட்டும்தான் அங்குள்ள பஜார். அந்த பஜாரின் முன்னால் தொங்கும் 25 வாட்டு பல்பு இரவு நேரங்களில் தூவும் வறட்சியான ஒளியில் அட்டன்ஷனாக நின்று பாடத் துவங்குவார் பட்டாளம் சாகிபு. விடிந்தாலும் முடியாத தியாகராஜ பாகவதருடைய பாடலை ரசிக் காமல் விளக்கை அணைக்கும் முத்துச்சாமிக்குத் தினமும் எச்சரிக்கை விடுவதுண்டு.

''நாளெ பாரு இந்த எடத்திலே ஒனக்கெ கடெ இரிக்காமெ ஆக்கிப் போடுறேன்.''

துருபிடித்த சைக்கிளைப் பெரும் பாடுபட்டு மிதித்து வியர்வையில் நனைந்த காக்கிச் சட்டையின் காலரைத் தூக்கி விட்டபடி முத்துசாமியின் கடைக்கு முன் வந்து இறங்கிய 'லைன் மேனைக்' கண்டபோது பட்டாளம் சாகிபுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. முத்துசாமியின் கடையில் நொங்கு போட்டு சர்பத் குடிப்பதற்காக சைக்கிளை ஸ்டாண்டில் போட்டுவிட்டு கடைக்கு நேராக நடந்த 'லைன்



மேனைத்' தடுத்து நிறுத்தினார்.

''ஒனக்கு சம்பளம் தர்றது எதுக்கு ஓய்...?'' பட்டாளம் சாகிபு துப்பாகியைத் தரையில் ஊன்றி நின்றபடி கேட்டார்.

பட்டாளம் சாகிபைப் பற்றி முன் பரிச்சயமிருந்ததினால் லைன்மேன் சற்றுத் தயக்கம் காட்டி நடித்தார்.

''சொல்லு ஓய்...''

''சோறு தின்னுறதுக்கு...'' லைன்மேன் சொன்னார்.

''மேலிடத்துக்கு எழுதிப் போட்டு ஒனக்கெ வேலையை டிஸ்மிஸ் பண்ணிப் போடு வேன்...'' பட்டாளம் எச்சரிக்கை செய்தார்.

''சாயிப்பே!'' லைன்மேன் கெஞ்சினார்.

''என்னெ ஆருணு தெரியுமா?''

''தெரியாது...''

''நா ஆருணு கேட்டுப்பாரு... சத்தாம் உசேன் நம்மொ பொடியனாக்கும், இண்ணுராத்திரி தூணிலெவெளக்கு எரியல் லேண்ணா நாளை காலமெ ஒன்னெ டிஸ்மிஸ் செய்து போடு வேன்...''

''சாயிப்பே, லைன்மேன் மக்கொ குட்டிக் காரரு பாவம்... டிஸ்மிஸ் செய்து போடாதெங்கோ...'' முத்துசாமி லைன்மேனுக் காகப் பரிந்து பேசினார்.

''நீ சொன்னதினாலே உடுறேன்...'' பட்டாளம் சாகிபின் கோபம் தணிந்தது.

லெப்டு ரைட் வைத்து திரும்பி நடக்கும் முன் பட்டாளம் சாகிப் கடைக்கு முன்னால் தரையில் கண்களை ஊன்றி எதற்காகவோ தேடினார்.

''என்ன சாயிப்பே தேடுதியோ... குவைத் திலெயிருந்து வந்த தங்கம் வல்லதும் விழுந்துதோ...?'' நொங்கு போட்ட சர்பத்தை கையில் எடுத்துக் கொண்டு லைன்மேன் கேட்டார்.

பட்டாளம் சாகிபு சிரித்தவாறு தரையி லிருந்து துள்ளி எடுத்தது ஒரு துண்டு பீடியெ. பீடியில் அப்பியிருந்த மணலைக் கையாலும், ஊதியும் துடைத்தார். கடைக்கு முன்பக்கமுள்ள தூணில் தொங்கிய கயிற்றின் கீழ்முனையி லுள்ள நெருப்பிலிருந்து பீடி பற்ற வைத்தார். புகை ஊதிவிட்டு அடி தூக்கி லெப்டு ரைட் வைக்கப் போகும்போது முத்துசாமி கேட்டார்.

''நர்ஸ் அனுப்பித் தந்த டிரிபிள்ஃபைவ் சிகரெட்டு தீந்து போச்சோ...?''

பட்டாளம் சாகிபுக்கும் அரசாங்க மருத்துவமனையிலுள்ள நர்ஸுக்குமிடையி லான தொடர்பைப்பற்றி முத்துசாமிக்குத் தெரியும். அது ஊரும் உலகும் அறிந்த தொடர்பு.

முத்துச்சாமியின் கேள்வி பட்டாளம் சாகிபுக்கு இரசிக்கவில்லை. ஒரு போலீஸ் அதிகாரி திருடனைப் பார்ப்பதுபோல் முத்துசாமியை முறைத்தார். அந்தப் பார்வை யில் கோபம் கொடி நாட்டியது.

''சாமி, நீ ரொம்ப வெளையாடுதா...நா எழுதிப் போட்டா மதி, நாளெ ஒனக்கெ கடெ இந்த எடத்திலே இரிக்காது எச்சரிக்கெ...?''

''அதுக்கு நா என்ன தப்பு செய்தேன் சாயிப்பே? ஓங்களுக்கு குவைத்திலெ இருந்து ஒரு லட்டர் வந்திருக்கிணு போஸ்டு மேன் சொன்னாரு. நர்ஸ் ஒங்களுக்கு அனுப்பியிருப் பாணு நெனச்சு கேட்டேன்...''

''நா அவளெ உட்டாச்சு...''

''ஏன்?...''

''எனக்கு அவொ என்.ஓ.சி. அனுப்பி தாரேணு சொல்லி அனுப்பி தரயில்லெ...''

''அப்பொ வந்திருக்குற குவைத் லட்டரே...''

''சத்தாம் உசேன் எனக்குப் போட்டிருப் பான்...''

''ஓ... அது... சரி...''

''நான்தான் குவைத்தைப் புடிக்க எளுதிப் போட்டேன்...''

''அப்படியா?''

''அவளெ பாம் போட்டு கொல்லச் சொன்னேன். என்.ஓ.சி. அனுப்பி தாரேன், தாரேணு என்னெ ஏமாத்திட்டே இருக்கா... உடுவனா அவளெ...? போஸ்டுமென் எங்கெ போனான்...?''

''ஓங்களெ தேடித்தான் போனான்...''

பட்டாளம் சாகிபு சந்திப்பை நோக்கி நடந்தார். தொலைவில் ஹாரன் சப்தம் கேட்டபோது போஸ்டு மேனை மறந்தார். கடமை உணர்வுடன் ஓடி சந்திப்பில் வந்து தோளில் துப்பாக்கி ஏந்தியபடி நின்றார்.

வந்தது ஜல்லி ஏற்றிய ஒரு லாரி.

லாரி கடந்து செல்லக் கையை உயர்த்தி அனுமதி கொடுத்தார்.

**...லெப்டு ரைட் வைத்து திரும்பி நடக்கும் முன் பட்டாளம் சாகிப் கடைக்கு முன்னால் தரையில் கண்களை ஊன்றி எதற்காகவோ தேடினார்...**

''வா... வா... பயப்படாதெ. நாந்தாப்பா நிக்குதேன்.''

மெதுவாக வளைவு திரும்பிய லாரியைப் பார்த்து எச்சரிக்கை செய்தார்.

''ரோடெல்லாம் குண்டும் குழியும்... மனுசனுக்கு நடக்க முடியாது. நாளெ சல்லி போட்டு ரோடே சரியாக்கல்லேண்ணா சீட்டெ கிழிச்சு போடுவேன். என்னெ ஏத்திட்டு போறதுக்கு நாளெ சத்தாம் உசேன் இஞ்செப்ளேன் அனுப்புவாரு...?''

அது வழி வழக்கமாக ஜல்லி ஏற்றிச் செல்லும் டிரைவருக்கு பட்டாளம் சாகிபைப் பற்றிய முன் அறிமுகமிருந்ததினால், பட்டாளம் சாகிப்புடைய காதைத் துளையிட்டு ஏறும் படியாக நீட்டி ஹாரன் ஒலி எழுப்பி அவருடைய கோபத்தைக் கிளறி விட்டார்.

பட்டாளம் சாகிபு டிரைவரைச் சுட்டு எரிக்கும்படி பார்த்தார்... அதற்கு முன் டிரைவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார். டிரைவரை கெட்ட வார்த்தையால் அபிஷேகம் செய்ய நா எழுந்தது. உடன் கரிப்புகை சிந்திக் கொண்டு லாரி முன்னால் குதித்தது.

''டேய் பயந்தா ஓடுதா... கள்ள நாய்க்குப் பொறந்த பயலே... கோபம் பீறிட்டு வந்ததால் அடக்க முடியாமல் பூட்ஸ் இல்லாத பூட்ஸ் காலால் கல்ரோட்டில் ஓங்கி மிதித்து அட்டன்ஷனாக நின்ற போது ஒரு கல்லின் கூரிய முனை கால் வெள்ளையில் குத்தி ஏறிய வலி சிரத்தில் அம்புபோல் பாய்ந்தேறியது. வேதனை தாங்க முடியாமல் தரையில் விழுந்த துப்பாக்கியைத் தூக்கி ரோட்டின் மண்டை ஓடை அடித்து உடைத்து கோபம் தீர்த்துக் கொண்டார். துப்பாக்கி முனை ஒடிந்து தெறித்தபோது துப்பாக்கியின் எஞ்சிய பகுதியைக் கையிலெடுத்து ஏமாற்றத்துடன் பார்த்தார்.

ஹம்சாவின் முள்வேலி கட்டிய தோப்பிற் குள் குதித்து, அங்கு நின்ற பூவரசு மரத்தில் ஏறி ஒடித்து தோல்களைந்து தயார் செய்த துப்பாக்கி. கையில் ஒரு துப்பாக்கியில்லாமல் கார் ஸ்டாண்டு சந்திப்பில் நின்றால் யாரும் தம்மைக் கண்டு நடுங்க மாட்டார்கள் என்ற தோன்றலின் உத்வேகத்தில் முள்வேலி குதித்துத் தாண்டி னார். தாண்டும் போது முள்வேலியிலுள்ள கூரிய இரும்பு ஆணி காலில் கிழித்த புண் பல வருடங்களாகியும் காயவில்லை.

> **தேசத் தொண்டு என்பது மனித சமுதாயத் தொண்டு என்றே என் கருத்தில் படுகிறது.**
>
> **— காந்தியடிகள்**

காலை ஓங்கி மித்தபோது புண்ணைச் சுற்றிக் கட்டிய கட்டு அவிழ்ந்து போனது பிறகுதான் தெரிந்தது. கட்டை மீண்டும் இறுக்கிக் கட்டத் துவங்கும் போதுதான் அரசு மருத்துவ மனையில் வேலை பார்த்த நர்ஸைப் பற்றிய நினைவு வந்தது. அந்தப்புண் காயாத காலம் வரை நர்ஸ் அவருடைய நினைவில் ஒரு நித்தியப் பசுமை.

கூரிய இரும்பாணி கிழித்த காயத்தி லிருந்து ஒழுகும் இரத்தத்தைத் துடைத்துச் சுத்தம் செய்து மருந்து கட்டிக் கொடுத்த நர்ஸிடம் முதலில் நன்றி தோன்றியது. எழுந்து செல்ல முற்படும்போது அவள் உட்காரச் சொன்னது எதற்கென்று புரியவில்லை. உட்கார்ந்தார். நீண்ட ஊசியுடன் வந்த அவளைக் கண்டு பயந்தார். கையில் ஊசி செங்குத்தாக இறங்கியபோது தாங்க முடியாத வலி. அவளைக் கடித்துக் கிழிக்கத் தோன்றியது. மருத்துவமனையிலுள்ள கொம்பன் மீசைக் காரன் கம்பவுண்டரைக் கண்டு பயந்து அவளைக் கண்டமேனி கெட்ட வார்த்தை களால் அபிஷேகம் செய்யவில்லை.

பற்களை நெறித்து வேதனையை அடக்கி னார். ஊசி இறங்கிய இடத்தைத் தடவிக் கொண்டு வெளியேறும்போது நர்ஸுக்கு நேராகச் சுட்டு விரலை அசைத்தார்.

''பார்... ஒன்னெ தண்ணி இல்லாத காட்டுக்கு அனுப்பிப் போடுதேன்...''

பட்டாளம் சாகிபின் எச்சரிக்கையைக் கேட்டுப் பருவப் பெண்ணான நர்ஸ் குலுங்கிக் குலுங்கி சிரித்ததை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மீண்டும் கோபம் கொடி பறக்கவிட்டது. அவளை ஏச நா உயர்ந்தது. அப்போது அங்குவந்த கம்பவுண்டர் பட்டாளம் சாகிபைப் பார்த்து மீசையைத் தடவினார்.

மீசை தடவியதைக் கண்டதும் ஒரு தடவை கம்பவுண்டரைக் கெட்ட வார்த்தை ஏசிய தற்குக் கம்பவுண்டரின் உரத்த கை பட்டாளம் சாகிபின் கபால குற்றியில் விழுந்ததையும் கண்ணிலிருந்து பொன் ஈக்கள் பறந்ததையும் எண்ணிப் பார்த்து ஓட்டம் பிடித்தார்.

காயாத வடுவிலிருந்து இப்போது வடியும் சலத்தை மொய்க்கும் ஈக்கள் அவருடைய கடும் எதிரிகள், ஈக்களின் தொந்தரவு தாங்க முடியாத நிலமை ஏற்படும்போது அதன் வமிசத்தை அழித்து ஒழிக்க பாம் போடுவேனென்று ஈக்களுக்கும் எச்சரிக்கை விடுவதுண்டு.

போஸ்டு மேன் வருகின்றாரா? பார் வையை மேலிட்டார். சத்தாம் உசேன் சொந்தக் கையால் எழுதிய கடிதமாக இருக்கும். போர் செய்ய உடன் புறப்பட்டுச் செல்ல எழுதியிருக்கலாம்.

சில வேளை, சத்தாம் உசேன் நம்மொ சீடப்பிள்ளை என்ற உண்மையை உணர்ந்த பின் அந்த நர்ஸ் பொண்ணு என்.ஓ.சி. அனுப்பி யிருக்கவும் கூடும்.

போஸ்டு மேன் எங்கே போய்த் தொலைஞ்சான்?

நர்ஸ் குவைத்திலிருந்து இப்போது கடிதம் அனுப்பாததால் அவளிடம் பிணக்கு. முன்னால் பலதடவை அவள் கடிதம் அனுப்பியதையும், வாசித்துக் கேட்டதையும் மறக்கவில்லை. தபால்காரனிடமிருந்து அவளுடைய தபாலை வாங்கி வந்து ரகசியமாக வாசித்துக் காட்டுவது சைனுல்லா அல்லது மம்மானியா, உடன் 15 காசுக்கு ஒரு போஸ்டு கார்டு வாங்கி சைனுல்லாவிடம் சொல்லி பதில் எழுதிப் போடத் தவறுவதில்லை. நர்ஸ், குவைத் என்ற முகவரியில், தபால் அலுவலகத்தின் முன் தொங்கும் சிவந்த பெட்டிக்குள் அவர் கையாலேயே போடுவது ஒரு குஷி.

**...தரையில் காலை ஒளி படரும் முன் கால் நடையாகக் குலசேகரத்திற்குப் புறப்பட்ட பட்டாளம் சாகிபு மூன்று நான்கு நாட்களாக நர்ஸின் வீட்டைத்தேடி அலைந்தார்...**

ஒரு தடவை எரியும் உச்சி வெயிலில் துப்பாக்கி ஏந்தியபடி முச்சந்திப்பில் அட்டன்ஷனாக நின்ற பட்டாளம் சாகிபின் கிழிந்த கால் சட்டையின் பின் பக்கம் ஒரு செத்த சுண்டெலி கயிற்றில் தொங்கிக்கிடந்ததை அவர் பார்க்கவில்லை. அது வழியாக வந்த நர்ஸ் அதைப் பார்த்து ஊறி ஊறிச் சிரித்தாள்.

''மாமா, அவொநிங்களெ காதலிக்கியா?'' சைனுல்லா காதில் ஊதியதைக் கேட்டதும் அவள் ஊசி குத்தி வைத்த கோபம் நெஞ்சிலிருந்து கரைந்தது. அவளைத் தண்ணி இல்லா காட்டுக்கு அனுப்ப எடுத்துக்கொண்ட முடிவையும் மாற்றிக் கொண்டார்.

நர்ஸைப் பற்றி யாராவது ஏதாவது தவறாகச் சொன்னால் போதும், பட்டாளம் சாகிபு துப்பாக்கியை சொன்னவரின் மார்புக்கு நேராகக் குறி வைத்து அலறுவார்.

''சுட்டுப் பொசிக்கிய போடுவேன்...''

அங்கு உள்ள மருத்துவமனையிலிருந்து இடமாற்றம் கிடைத்துப்போன நர்ஸை அவருடைய கழுகுக் கண்கள் தேடின.

''நம்மொ ஆளு எங்கெ மருமோனே...?''

சைனுல்லா பதில் சொல்லும்போது சிரிப்பதில்லை. ''அவளுக்கு சொகமில்லெ. ஒங்களெ பாக்க ஆசப்படுதா...''

''அப்படியா? நிக்கு எப்படித் தெரியும்?''

''அவளுக்கெ தம்பி பயலெ கண்டேன். ஒங்களெ அவொ அவளுக்கெ ஊட்டுக்கு கூப்பிட்டாளாம்.''

''ஊடு எங்கடேய்?''

''குலசேகரத்துக்கு மேலே வடக்கோட்டு ஒரு ரோடு போவுது. அது வழி நேரே போவணும். அங்கெ இருந்து தெக்கே போயி கெழக்கெ போற ரோடு வழியாகப் போவணும். அங்கெ நின்னு பாத்தா அவளுக்கெ ஊடுதெரியும்.'' வழி சொல்லிக் கொடுத்த சைனுல்லா, பட்டாளம் சாகிபின் கண் முன்னால் நிற்பதில்லை. கல்லைத் தூக்கி வீசி சைனுல்லாவின் மண்டையை உடைத்து தகர்ப்பேன் என்ற புலம்பல். ஒரு தடவை கண் எதிரே வந்த சைனுல்லாவை கல்லை எடுத்துக் கொண்டு வெட்டினார். சைனுல்லா தப்பி ஓடினான்.

தரையில் காலை ஒளி படரும் முன் கால் நடையாகக் குலசேகரத்திற்குப் புறப்பட்ட பட்டாளம் சாகிபு மூன்று நான்கு நாட்களாக நர்ஸின் வீட்டைத்தேடி அலைந்தார். நடந்து நடந்து புண்பட்ட கால்கள் வீங்கின. பசி தாங்காமல் தளர்ந்து தெருவோரத்தில் விழுந்தார்.

முச்சந்திப்பின் உயிர்த் துடிப்பு அடங்கிப் போன நாட்கள், மக்களுக்கிடையே பல துயர சந்தேகங்களை எழுப்பின. பாழ் கிணறுகளில் எட்டிப்பார்த்தனர். ஆற்றோரங்களில் தேடினர். கடற்கரையில் ஏதாவது பிணம் கிடைக்கின்றதா என்று கூர்ந்து நோக்கினர். நிலமை மோச மடைவதை உணர்ந்ததும் ஸைனுல்லா வெடுக்கெனச் சிரித்துக்கொண்டு சொன்னான்.

''பட்டாளம் நர்ஸைத் தேடி கொலசேகரத் துக்கு போயிரிக்கி பாரு...''

மலை ஏறுமிடத்தில் பதைபதைத்துச் சுருண்டு கிடந்த பட்டாளம் சாகிபை வேளிமலை இறங்கி வந்த கூப்பு லாரி டிரைவர் ஒருவர் காப்பாற்றி குலசேகரத்தில் இறக்கிவிட்டார். குலசேகரத்திலிருந்து விறகு ஏற்றி வந்த லாரியில் பட்டாளம் சாகிப் முச்சந்திப்பில் இறங்கியதும் துப்பாக்கி ஏந்திக்கொண்டு ஸைனுல்லாவைத் தேடினார். ''கண்டா, உடனெ சுட்டுப் பொசுக்கிப் போடுவேன், இல்லேண்ணா மண்டையெ ஒடப்பேன்... என்னெ ஏமாத்திப் போட்டான்...''

ஸைனுல்லாவைத் தேடியிருக்கும்போது தான் நர்ஸ் குவைத் போய்விட்டதாக மம்மானியா பட்டாளம் சாகிபின் காதில் ஊதினான். ''போய் எறங்கினதும் ஒங்களுக்கு என்.ஓ.சி. அனுப்பித் தருவா...''

ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம், ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். நமது நாட்டுத் தாய்மார்களின் கல்வியறிவைப் பொறுத்தே நம் எதிர்காலம் அமையும்.

— மூதறிஞர் ராஜாஜி

**... குலசேகரத்திலிருந்து விறகு ஏற்றி வந்த லாரியில் பட்டாளம் சாகிப் முச்சந்திப்பில் இறங்கியதும் துப்பாக்கி ஏந்திக்கொண்டு ஸைனுல்லாவைத் தேடினார்...**

மம்மானிபா சொன்னதைக் கேட்டபோது ஒரு வார அலைச்சலின் கசப்பான அனுபவங் களை மறந்து தரையில் துப்பாக்கியை ஊன்றி அட்டன்ஷனாக நின்றார்.

பட்டாளம் சாகிபுக்கு வரும் கடிதத்தை தபால்காரன் அவரிடம் கொடுக்காமல் அவரை ஏமாற்றுவதாக அறிந்து தபால்காரனைத் தண்ணி இல்லா காட்டுக்கு அனுப்பப் போவதாக அதட்டினார்.

நர்ஸின் தபாலை எதிர்நோக்கி தபால் அலுவலகத்தின் முன் துப்பாக்கி ஏந்தியபடி நின்றார். ஜன்னல் கம்பி வழியாகத் தலையைப் போட்டு போஸ்டு மாஸ்டரிடம் அதட்டிக் கேட்டார். ''அப்துல் காதர் மகன் அகம்மதுக் கண்ணுக்கு'எளுத்துண்டா...''

தொந்தரவு தாங்க முடியாமல் ஒரு தடவை போஸ்டு மாஸ்டர் 'ரூல்தடி'யை எடுத்து மேஜை மீது அடித்து ஓசை எழுப்பி பயமுறுத்தினார்.

''போலெ...''

''பார்... ஒன்னெ தண்ணி இல்லா காட்டுக்கு அனுப்பி போடுதேன்...''

போஸ்டு மாஸ்டரை அச்சுறுத்தியதோடு தபால் அலுவலகத்தின் பக்கம் தலை காட்டுவதில்லை.

மீண்டும் முச்சந்திப்பில் துப்பாக்கி ஏந்தி நின்று வாகனங்களுக்குத் திசை காட்டினார்.

ஸைனுல்லா பயந்தவாறு சாகிபை நெருங்கி ஒரு பீடி கொடுத்தான். 'கரண்டு' கூடுதலான கைச்சுற்று பீடியைக் கண்டபோது உலகை மறந்தார்.

''மாமா...''ஸைனுல்லா கூப்பிட்டான்.

''என்னடா... மைனரே...''

''ஒரு விஷயம் தெரியுமா?...''



''என்னடா...''

''நிங்களெ அந்த பளஞ்சோறு பயல் ஏமாத்திப் போட்டான்.''

''என்னயியா? ஏமாத்தி போட்டானா? உடுவனா..'' துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தார். ''அவனையும் அவனுக்கெ உம்மாயையும் அவனுக்கெ வாப்பாயையும் சுட்டுப் பொசுக்கி போடமாட்டேன். என்ன சொல்லு...?''

''பளஞ்சோறு பயலுக்கெ வாப்பாக்கெ பேரென்ன?''

''அப்துல் காதர்.''

''பளஞ்சோறக்கெ பேரென்ன...?''

''அய்மக்கண்ணு...''

''ஒங்கெ அதே பேருதான் அவனுக்கும். அவன் ஒங்ளெ ஏமாத்தி போட்டான்.''

''என்னயா... உடுவனா...?''

''கேளுங்கோ. நர்ஸ் ஒங்களுக்கு என்.ஓ.சி. அனுப்பி வச்சா. போஸ்டு மேனுட்டெ போயி நான்தான் அகம் மதுக் கண்ணு என்னு சொல்லி அந்த என்.ஓ.சி.யை வாங்கி ஆருட்டெயும் சொல்லாதெ பளஞ்சோறு அதையும் கொண்டு குவைத்துக்கு போயிட்டான்...''

''எனக்கு அவொ அனுப்பின என்.ஓ.சி.யை கொண்டு போயிட்டானா...''

''ஓ...''

''அவனெ உடமாட்டேன். நம்மொ பொடியன் சத்தாம் உசேனுட்டெ சொல்லி குவைத்திலெ பாம் போட்டு அவனையும் அவளையும் தொலைச்சு போடுதேன். உம்மாக்கு புள்ள இல்லாதாக்கிப் போடுதேன்...''

பட்டாளம் சாகிபுக்கு கடும் வாசி. பற்களை நெறிந்தார். தரையில் ஓங்கி மிதித்தார்.

ஆகாசத்தில் கள்ளப்பருந்துகள் வட்டமிட்டன. பளஞ்சோறு பயலெ ஏற்றி சென்ற விமானம் என்று சிலர் சுட்டி காட்டினர். உடன் கோபமடைந்து துப்பாக்கியை மேலே தூக்கிப் பிடித்தார்.

''போங்கடா அது கள்ள பருந்துடா...'' சொன்னவர்களைவெறித்துப்பார்த்தார். முனை

ஒடிந்துபோன துப்பாக்கியை தரையில் ஊன்றி வானத்தை உற்று நோக்கினார். வெண் மேகங்களின் மறைவில் ஏதேனும் விமானம் போகின்றதா என்று கவனித்தார்.

தொலைவிலிருந்து ஒரு பஸ் இரைத்து வருவதைக் கண்டார். திசைக் காட்ட கையை தூக்கினார்.

''மாமா... இந்த பஸ்ஸுக்கு கை காட்டண்டாம். அவன் போயி முட்டி சாவட்டு. இந்த பஸ்லதான் அந்த பளஞ்சோறு பயலெ ஒங்கெ என்.ஓ.சி. யையும் கொண்டு குவைத்துக்கு ஏத்திட்டு போனது...''

''அப்படியா இன்னா பாரு என்ன செய்யப்போறேன்.''

பட்டாளம் சாகிப் துப்பாக்கியை தயாராக வைத்தார். பற்களை நெறித்தார். காலோங்கி தரையில் மிதித்தார்.

''பயர்....'' சீறி வந்த பஸ்ஸுக்கு முன்னால் துப்பாக்கியை நீட்டியபடி குதித்தார். ●

– 'தங்கராசு' சிறுகதை தொகுப்பிலிருந்து...
நன்றி: பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மைலாப்பூர், சென்னை - 4

## சரியாகிவிடும்!

வின்ஸ்டன் சர்ச்சில் ஒருமுறை மனநோய் மருத்துவமனையைப் பார்வையிடச் சென்றிருந்தார். உள்ளே, அவரை ஒரு மன நோயாளி வழிமறித்தான். மெய்க் காப்பாளர்கள் அவனை ஒதுக்கி விட்டார்கள்.

அவர்களைப் பேசாதிருக்கும்படி சொல்லிவிட்டு, அவனிடம் அனுதாபத்தோடு சர்ச்சில் கேட்டார்: ''ஏனப்பா, உனக்கு என்ன வேண்டும்?''

உடனே அவன் – ''நீ யாரென்று தெரிய வேண்டும்'' என்றான்.

''நான்தானப்பா இந்த நாட்டின் பிரதமர், வின்ஸ்டன்ட் சர்ச்சில்'' என்று அவர் கூற – அவன் பலமாகச் சிரித்தான்.

''என்னப்பா, ஏன் சிரிக்கிறாய்?' என்றார், அவர்.

''இங்கு வந்த புதிதில் நான்கூட உன்னைப்போல நான்தான் நெப்போலியன் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். நீ இப்போது தானே வருகிறாய் – போகப் போகச் சரியாகிவிடும்!'' என்றான் அவன்.


தமிழரசு

படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ... ரூ. 72 |
| அரையாண்டுச் சந்தா | ... ரூ. 36 |

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ... ரூ. 36 |

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை - 600 002.

# தெரிந்து கொள்ளுங்கள்

ரயில்களின் பெயர் தமிழில் எழுதப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது. இனி ரயில்களில் - 'பாசஞ்சர் ரயில்' என்பது தொடர் வண்டி என்றும், பாஸ்ட் பாசஞ்சர் ரயில்' வேகத் தொடர் வண்டி என்றும், 'எக்ஸ்பிரஸ் ரயில்' விரைவுத் தொடர் வண்டி என்றும் தமிழில் எழுதப்பட்டிருக்கும்.



கர்நாடக மாநிலத்திலிருந்து டில்லி மேல் சபைக்கு, தேர்வுபெற இருந்த ஒரு உறுப்பினர் இடத்திற்காக மாண்புமிகு பிரதமர் தேவகவுடா அவர்கள் மனுச்செய்திருந்தார்; அவரை எதிர்த்து வேறு யாரும் மனுச் செய்யாததால், அவர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக முறைப்படி அறிவிக்கப்பட்டது.

1996 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியால், இந்திய உலகக் கோப்பை கிரிக்கெட் கமிட்டிக்கு ஒரு கோடியே 56 இலட்சத்து 64 ஆயிரத்து 224 ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதய நோயால் அவதிப்படும் ரஷிய அதிபர் எல்ட்ஸினுக்கு விரைவில் அறுவை சிகிச்சை நடைபெற விருக்கிறது. சிநைடா போலியோ என்ற 46 வயதுப் பெண்மணி ஒருவர் 'ஜனநாயகம் காப்பாற்றப்பட, அவருக்கு நான் இதயத்தைத் தரச் சம்மதிக்கிறேன்' என்று அறிவித் திருக்கிறார். இதை யறிந்த எல்ட்சின், அவருக்கு நன்றிக் கடிதம் எழுதியுள்ளார்!

*இலங்கையில் 1987ல் தான் முதன்முதல் ஒருவருக்கு எய்ட்ஸ் நோய் பரவத் தொடங்கியது. இப்போது அந்த எண்ணிக்கை 172 ஆகியுள்ளது. இன்னும் பத்தாண்டு களில் அங்கே 80 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் இருப்பார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை மூலம் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது!*

புதுடில்லியில் உள்ள தேசிய தொல்பொருள் ஆய்வுத்துறையின் 1948-ஆம் ஆண்டு முதலான வரலாற்றுக் குறிப்புகளைச் சேகரித்து வைத்துள்ளனர். 1857க்கு முற்பட்டவை மைக்ரோ பிலிம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளனவாம்.

# வேலை வாய்ப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி

## COSTS AND WORKS ACCOUNTANCY

இப்பயிற்சியினை The Institute of cost and works Accountants of India (ICWA) என்ற நிறுவனம் அஞ்சல் வழியாக வழங்குகிறது. +2 முடித்தவர்கள் இந்த நிறுவனத்தின் முதல் நிலைத் தேர்வினை எழுதலாம். குறைந்த அளவு 50 மதிப்பெண் பெற்ற பட்டதாரிகள் நேரிடையாக இந்நிறுவனத்தில் பயிற்சி பெற முடியும். CA பயிற்சியைப் போலவே CWA பயிற்சியும் இருநிலையினைக் கொண்டது. பயிற்சிக் காலம் 18 மாதங்கள் ஆகும். ஆண்டில் இருமுறை தேர்வு நடைபெறுகிறது. பொறியியல் பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் படித்தவர்கள், இத்தேர்வில் வெற்றி பெற்றால் நல்ல ஊதியம் பெற வாய்ப்பு உண்டு. இதன் தலைமையகம் கல்கத்தாவில் உள்ளது. அதன் முகவரி:

The Institute of Cost and Work Accountants of India,
# 12, Sudder Street,
Calcutta - 700 016.

இதன் தென்னக மண்டல அலுவலகம்:

Southern India Regional Council of the ICWAI of India,
# 65, Montieth Lane,
Egmore,
Chennai - 600 008.

## CHARTED FINANCIAL ANALYST (CFA)

கம்பெனி நிதி, முதலீடு, நிர்வாகம் ஆகிய நிலைகளில் பணியாற்றுபவர்தான் CFA ஆவார். Mutual Funds, Hire Purchase, Lease Financing, Venture capital. ஆகிய துறைகளில் இவர்களின் பணி இன்றியமையாததாகும். இதற்கான பயிற்சியினை ஹைதராபாத்தில் உள்ள The Institute of Charted Financial Analysts of India (ICFAI) தொலைக் கல்வித்துறையில் நடத்துகின்றது. முக்கிய நகர்களில் தொடர்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இளநிலைப் பட்டதாரிகள் நுழைவுத் தேர்வுக்குப் பின்னர் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். CA, MBA, CWA, காப்பீட்டுக் கழக வங்கி அலுவலர்கள், சிவில் சர்வீஸ் ஆபீஸர்கள் ஆகியோர்களுக்கு நுழைவுத் தேர்வில் விதிவிலக்கு உண்டு.

இப்பயிற்சி 3 நிலைகளில் நடைபெறுகின்றது, Preliminary, Inter and Final. இதே CFA பயிற்சியின் பாடத்திட்டம் இரண்டாண்டு முழுநேரப்படிப்பாகவும், 3 ஆண்டு பகுதி நேரப் படிப்பாகவும் பல்வேறு நிறுவனங்கள் நடத்துகின்றன. அவற்றுள் சென்னையில் Institute for Financial Management and Research என்ற நிறுவனமும் ஒன்று.

உயர் நிதி நிறுவனங்கள் (APEX FINANCIAL INSTITUTIONS).

இந்திய அரசின் மைய வங்கி (RBI), Industrial Development Bank of India (IDBI), Unit Trust of India (UTI), National Housing Bank (NHB), National Bank for Agriculture and Rural Development (NABARD), Securities Exchange Board of India (SEBI), Export-Import Bank of India (ExM Bank), Small Industries Development Bank of India (SIDBI), Industrial Credit and Investment Corporation of India (ICICI)

போன்ற உயர் நிதிநிறுவனங்கள் தங்கள் அலுவல்களை நேராகவே போட்டித் தேர்வின் மூலம் தேர்ந்து எடுக்கின்றது. Grade A, Grade B என்ற நிலைகளில் தேர்ந்தெடுக்கிறது. MBAS, CAS, CFAS முதுநிலை பொருளாதார, புள்ளியியல் பட்டதாரிகள், வணிக வங்கிகளில் பயிற்சி பெற்ற அலுவலர்கள், பொறியாளர்கள் இப்பணிகளுக்கான போட்டித் தேர்வில் கலந்துகொள்ளலாம்.


## 11. ACTUARIAL SCIENSCE (INSURANCE)

நாடெங்கிலும் உள்ள ஆயுள் காப்பீட்டுக் கழகங்களில் பணியாற்ற Actuarial Science படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

எண்ணம் என்னும் கழனியிலே எத்தனையோ விளைகின்றன; அவற்றின் பயன்யாவும் கண்டறிந்து சுவைபெறுவதுதான் அறிவுடைமை.
– பேரறிஞர் அண்ணா

மேற்கு வங்க மாநில கல்யாணி பல்கலைக் கழகம், பாம்பே பல்கலைக்கழகம், கோவா பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங் களில் இப் பட்டப்படிப்புத் துறை பயிற்று விக்கப்படுகின்றன. பம்பாயில் உள்ள Actuarial Society of India இதற்கான பாடத்திட்டத்தினை வழங்கி உள்ளது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி இத்துறையில் முதுநிலை பட்டய வகுப்பினைப் பகுதி நேரத்தில் நடத்துகின்றது. பொருளா தாரம், கணிதம், புள்ளியில், வணிகவியல் பயின்றவர்கள், இப்படிப்பினை மேற் கொண்டால் நல்ல வேலைவாய்ப்பு உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகமும், அண்ணா மலைப் பல்கலைக்கழகமும் இன்சூரன்ஸ் துறையில் பட்டய வகுப்புக்களை நடத்துகிறது. இளநிலைப் பட்டதாரிகள் இப் பட்டய வகுப்பில் சேரத் தகுதியுள்ளவர்கள்.

### *12. விளம்பரம் (ADVERTISING)*




'விளம்பரம் இல்லையேல் இன்றைய வியாபாரம் இல்லை' என்பது புதுமொழி. விளம்பரங்கள் பல வகையிலும், நிலைகளிலும் பல்கிப் பெருகி வருவதை நாம் அறிவோம். மக்கள் தொடர்பு சாதனங்களில் விளம்பரங்கள் இன்று இன்றியமையாத இடத்தைப் பெற்றிருப்பது கண்கூடு. நிர்வாகத் துறையிலும் (Executive Department), படைப்பாற்றல் துறையிலும் (Creative Department) படித்தவர்கள் சிறப்புப் பெற்று வருகின்றனர். MBA படித்தவர்கள்-குறிப்பாக அங்காடி இயலில் சிறப்புப் பெற்றவர்கள் இத்துறையில் சிறப்புப் பெற்றுவருகின்றனர். தொழில் கல்லூரிகளில் விளம்பரங்கள் பட்டயத் துறையில் பயிற்று விக்கப்படுகின்றது. டெல்லியிலுள்ள The Indian Institute of Mass Communication, பம்பாயில் உள்ள Xavier's Institute of Communication அகமதாபாத்தில் உள்ள Muthra Institute of Management, பாரதிய வித்யாபவனின் கிளைகள் விளம்பரத்துறைக்கும், தகவலியலுக்கும் பயிற்சி அளிக்கின்றன. அகமதாபாத்தில் உள்ள National Institute of Design Visual Communication என்ற துறையினைப் பயிற்றுவிக்கின்றது. சென்னை லயோலா கல்லூரியும் இளநிலை அளவில் Visual communication பயிற்சியினை நடத்துகின்றது.

பன்னாட்டு நிறுவனங்கள் நிரம்ப இந்திய நாட்டிற்கு வருகின்ற காரணத்தால் நிரம்ப வேலை வாய்ப்புகள் பெருகும் என்பதில் ஐயம் இல்லை.

### *13. இதழியல் (JOURNALISM)*

இதழியல் துறை விரைந்து வளர்ந்துவரும் துறையாகும். மின்னியல் தகவல் தொடர்பு சாதனங்கள் இதழியல் துறையினை வளப் படுத்துகிறது. இதழியல் துறையும் பன்முகப் படுத்தப்பட்டுவிட்டது. இதழியலார் விளை யாட்டுத்துறை, பொருளியல் துறை, நிதியியல் துறை, வாணிபத்துறை, வானொலித் தொலைக் காட்சித் துறைகளில் ஒளிப்படத்துறை, திரைப் படத்துறை என்ற பல்வேறு துறைகளில் சிறப்புப் பயிற்சியினையும் பெற்று திறம்படப் பணியாற்றி வருகின்றார்கள். நாளேடுகளும், பருவ இதழ்களும் ஆங்கிலத்திலும், வட்டார மொழிகளிலும் பல்கிப் பெருகி வருகின்றன. எனவே, இத்துறையில் வேலைவாய்ப்புகள் பெருகி வருவது கண்கூடு. துணுக்குப் படங்கள், கேலிச்சித்திரங்கள் போன்றவை வளர்ந்து வருகின்றன. பருவ இதழியல் துறை நாளும் புதுப்புதுப் பொலிவோடு வளம்பெற்று வருகிறது. முழுநேர எழுத்தாளர்களோடு சுதந்திர எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. நூலாக்கங்களும், மொழி யாக்கங்களும் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இதழியல்துறை பற்றிய சான்றிதழ் பட்டய பட்ட வகுப்புகள் நாடெங்கிலும் பல்கலைக் கழகங்களில் துவக்கப்பட்டுள்ளன. மைசூர்,




பம்பாய், பனாரஸ், மணிப்பூர், பெங்களூர், கல்கத்தா, மராத்துவடா பல்கலைக் கழகங்கள் இளநிலை இதழியல் படிப்பினை நடத்து கின்றன. மைசூர், கர்னாடகா, பஞ்சாபி, பெங்களூர், பனாரஸ், கல்கத்தா, ராஞ்சி, கேரளா, காஷ்மீர், மங்களூர், ஜாமியாமில்லியா பல்கலைக்கழகங்கள் முதுநிலை இதழியல் துறையினை நடத்துகிறது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் தொலைக்கல்வித்துறையில் இதழியல் தகவலியல் முதுநிலைப் பட்டப் படிப்பினை ஆங்கில - தமிழ் வழிகளில் நடத்துகின்றன. டெல்லியிலுள்ள 'Indian Institute of Mass Communication', 'YMCA Institute of Mass Medium Studies', 'Xavier Institute of Communication' சென்னை பம்பாய், கல்கத்தா, நாக்பூர், உஸ்மானியா, பூனா ஆகிய பல்கலைக் கழகங்களும் இத்துறையில் சிறப்பான பயிற்சிகளை அளிக்கிறது. நாடெங்கிலுமுள்ள முக்கிய நகர்களில் 'பாரதிய வித்யா பவன்' கல்லூரிகள் அமைத்துத் தகவலியல் துறையில் பெரும்பணியாற்றி வருகின்றன. சான்றிதழ் படிப்பினை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பகுதி நேரப் பயிற்சியாக வழங்குகிறது. பத்தாம் வகுப்பில் வெற்றி பெற்றவர்கள் இளநிலைப் பட்டதாரிகள் முழுநேர இதழியல் படிப்பினை இப் பல்கலைக் கழகம் வழங்கு கிறது. பட்டய வகுப்பினை அலிகார் ராஜஸ்தான், அழகப்பா, சௌராஷ்ட்ரா, Indian Institute of Mass Communication நாக்பூர், உஸ்மானியா, கௌஹாத்தி, மைசூர், கிருஷ்ண தேவராயா, குஜராத் காலிகட், கொச்சி, மதுரை, காமராஜ் போன்ற பல்கலைக் கழகங்கள் வழங்குகின்றன. இளநிலைப்பட்டதாரிகள் ஓராண்டில் இப்பயிற்சியினைப் பெறலாம்.

குறிப்பாக மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் இளநிலையில் அறிவியல் தகவலியல் (B.Sc., Science Communication) பட்டப்படிப்பும் சென்னை லயோலா கல்லூரி இளநிலையில் Visual Communication படிப்பினையும் பயிற்றுவிக்கின்றனர். மொழிப் பாடங்களைச் சிறப்பாகப் பயிலுகின்றவர்கள் இத்துறையில் பயிற்சி பெற்றால் வேலை வாய்ப்பினை எளிதில் பெறமுடியும்.

### 14. சுற்றுலாத் துறை (Tourism)

சுற்றுலாத்துறை வெகுவேகமாக வளர்ந்து வரும் துறையாகும். அண்மைக் காலங்களில் அன்னியச் செலாவணியை அதிகமாகப் பெற்றுத்தரும் துறையாகும். தேசிய அளவிலும் மாநில அளவிலும் சுற்றுலா வளர்ச்சிக் கழகங்கள் துவக்கப் பெற்று பல்வேறு செயல் திட்டங்களை உருவாக்கியுள்ளன. Indian Institute of Travel and Tourism Management (IITTM), டெல்லியில் துவங்கப் பெற்று சுற்றுலாக் கல்வியை மேம்படுத்தி வருகிறது. Indian Institute of Travel and Tourism Management சுற்றுலாக் கல்வியினையும் நிர்வாகத்தினையும் மேம் படுத்தி வருகிறது. குருசேத்திரா, அலிகர், குவாலியரில் உள்ள சிவாஜி, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத்துறை National Council for Hotel Management and Category Technology (NCHMCT) என்ற அமைப்பினை டெல்லியில் நிறுவி உள்ளது. இந்த அமைப்பு நாடெங்கிலும் உள்ள பதினேழு நிறுவனங் களில் மூன்றாண்டு பட்டயப் படிப்பினை இத்துறையில் நடத்துகிறது. இதற்கான நுழைவுத் தேர்வில் பலனறிமுறையில் எழுத்துத் தேர்வும் பின்னர் நேர்முகத் தேர்வும் உண்டு.

10 +2 முடித்தவர்கள் குறிப்பாக ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக எடுத்தவர் கள் இப்பயிற்சியில் சேரலாம். இத்துறையில்

'வாழ வேண்டுமெனில் - தொழில்கள்
வளர வேண்டுமய்யா
ஏழை என்றொருவன் - உலகில்
இருக்க லாகாதையா!'
– கவிமணி

Oberai, Taj and Welcome Group நிறுவனங்கள் மராத்வுடா பல்கலைக் கழகங்கள் இச் சுற்றுலாத்துறையில் இளநிலை முதுநிலைப் பட்டதாரிகளுக்கு, Master of Tourism Administration (M.T.A.) என்ற பயிற்சியினை வழங்குகிறது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வித்துறை Master of Tourism Management என்ற பயிற்சியினை வழங்குகிறது. பாண்டிச்சேரி, சென்னை, மதுரை, உத்கல், கோவா, கேரளா, டெல்லி, பம்பாய், அண்ணாமலை, ஆக்ரா, அனந்தப்பூர், இந்தூர், சாகர், குருகேந்திரா இமாச்சால பிரதேஷ், சிவாஜி, ரவிசங்கர், மராத்துவடா, பெர்ஹாம்பூர் போன்ற பல்கலைக் கழகங்கள் ஓராண்டு பட்டயப் படிப்பினை இத்துறையில் வழங்குகிறது. இளநிலைப் பட்டதாரிகள் இத்துறையில் சேரலாம். திருவனந்த புரத்திலுள்ள 'Kerala Institute of Tourism' இத்துறையில் சிறப்புப் பயிற்சியினை வழங்குகிறது. பம்பாயிலுள்ள 'SNDT Women's University', Sophia Polytechnic, Bombay Nirmal Niketan, போன்ற நிறுவனங்களும் இத்துறையில் பயிற்சி அளிக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் உள்நாட்டுக்குள்ளும் வெளிநாட்டிலிருந்தும் குவிகின்ற காரணத்தினால் இத்துறையில் வேலை வாய்ப்புக்கள் பெருகிவருகின்றன. மேலும் நாடெங்கிலும் பயண முகமைகள் (Travel Agencies) பெருகிவருவதால் இத்துறையில் நல்ல ஊதியம் பெற சிறப்புப் பயிற்சி பெற்றோருக்கு வாய்ப்பு உண்டு; வளர்ச்சியும் உண்டு.

### 15. உயிரியல் தொழில் நுட்பம் (Bio-Technology)

மருந்தாக்கத் தொழில், வேதியியல், தொழில் வேளாண்மை ஆகிய துறைகளிலும் ஆராய்ச்சி வளர்ச்சித்துறைகளிலும் உயிரியல் தொழில் நுட்ப வல்லுனர்கள் பெரிதும் விரும்பப்படுகின்றனர். டெல்லி காரக்பூரில் உள்ள ITI இத்துறையில் பயிற்சி அளிக்கிறது +2 நிலையில் இயற்பியல், வேதியியல், கணித வியல், உயிரியல் படித்தவர்கள் சிறப்புப் பயிற்சியினைப் பெற முடியும். டெல்லி IIT யில் Integrated five year M.Tech, Programme in Bio-Chemical Engineering and Bio-Technology பயிற்றுவிக்கப்படுகிறது. காரக்பூர் ITI யில் Integrated M.Tech Programme of five and half years Bio-Technology பயிற்றுவிக்கப்படுகிறது. இத்துறையில் நுழைய ITI Joint Entrance Exam எழுத வேண்டும். ஆண்டுதோறும் மே மாதம் இத்தேர்வு நடைபெறும். டெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் மே மாதத்தில் கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களில் M.Sc., Bio-Technology படிக்க நுழைவுத்தேர்வு நடத்துகிறது.

Banaras Hindu University, Varanasi.
Pondicherry University.
M.S. University, Baroda.
Poona University.
Devi Ahilya Vishwa Vidhyalaya, Indore.
Goa University.
Guru Nanak Dev University.
Central University, Hyderabad.
Madurai Kamaraj University,
Punjab University, Chandigarh.
G.B. Pant University of Agriculture Technology.
Jawaharlal Nehru University, Delhi.

வேளாண்மை உயிர் நுட்பத்துறையில் M.Sc., பட்டம் பெற, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், உயிர்நுட்பத்துறையில் M.Tech. என்ற முதுநிலைப் படிப்பினை அண்ணாபல்கலைக் கழகமும் நடத்துகின்றன. M.B.B.S., B.U.Sc., B.Sc., (Hons) படித்தவர்களும் இத்துறையில் பயிற்சி பெறலாம். இத்துறையில் பயிற்சி பெறப் பொதுவான நுழைவுத் தேர்வு ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் அறிவிக்கப் படும். மே மாத வாக்கில் 30 நகர்களில் நடை பெறும். இத்துறையில் பயின்றவர்களுக்கு ஆராய்ச்சி வாய்ப்பு இந்தியாவில் மிகுதியு முண்டு. வெளிநாடுகளிலும் இவர்கள் பெரிதும் விரும்பப் படுகிறார்கள். உயர்வான ஊதியம் இவர்களுக்கு எங்கும் கிடைக்கும்.

### 16. உணவக நிர்வாகம் (Hotel Management)

சுற்றுலாப் பயணிகள் பெருகி வருவ தாலும், போக்குவரத்துத் துறை வளர்ச்சி

பெற்றுள்ளதாலும் அண்மைக்காலங்களில் உணவக நிர்வாகம் சிறப்புப் பெறத் தொடங்கிவிட்டது. நாடெங்கும் நட்சத்திர ஓட்டல்கள் பெருக ஆரம்பித்துவிட்டன. Motels, Resort Hotels, Palace Hotels, Floating Hotels, Air-port Hotels, Youth Hostels, Suburban Hotels என்று இத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது. உணவக மேலாண்மை பற்றிய பயிற்சியினை அளிக்கிறது. டெல்லியிலுள்ள 'Oberai School of Management' மூன்றாண்டு இளநிலைப் பட்டப்படிப்பினை இத்துறையில் நடத்துகிறது. கர்நாடகாவில் மணிப்பால் நிறுவனம் இத்துறையில் மூன்றாண்டு பட்டப்படிப்பு நடத்துகின்றது. தாஸ் குரூப் ஔரங்காபாத் நகரில் Indian Institute of Hotel Management என்ற அமைப்பின் மூலம் பயிற்சி அளிக்கிறது. பாதுகாப்புத்துறை, ரெயில்வே, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்கு வரத்து தொழிற்சாலை வளாகச் சிற்றுண்டிச் சாலைகளில் இத்துறையில் பயிற்சி பெறுகின்றவர்கள் வளாகத் தேர்வின் மூலம் வேலை வாய்ப்பும் பெறுகின்றார்கள். இத்துறையில் முதுநிலையில் பட்டம் பெற்றவர்கள் பயிற்சி நிறுவனங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்ற விழைகின்றார்கள். குறைந்த அளவு மாதம் ரூ. 5000/- வரை ஊதியம் பெற இத்துறையில் வாய்ப்பிருக்கிறது. வெளிநாடுகளிலும் இத்துறையில் பயின்றவர்கள் எளிதில் வேலை வாய்ப்புப் பெறமுடிகிறது.

### 17. வைரம் பட்டை தீட்டுதலும், நகை வடிவமைப்பும்

இந்திய நாட்டில் மகளிர் பெரிதும் நகைகளைப் பல்வேறு வடிவங்களில் விரும்புகின்றனர். ஆகவே, இத்துறையினர் பெரிதும் அண்மைக்காலங்களில் வேலைவாய்ப்பினைப் பெற முடிகிறது. 10 + 2 தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 3 முதல் 8 மாதங்கள் வரை இப்பயிற்சியில் குறுகிய காலப் பயிற்சியினைப் பெற வாய்ப்பிருக்கிறது. மும்பாயிலுள்ள Gemmological Institute of India (29, Gurukul Chambers, 187-189 Mumbadevi Road, Mumbai - 2.) இத்துறையில் டிப்ளமோ வகுப்புகளைக் கீழ்க்கண்ட நிறுவனங்கள் நடத்துகின்றன.

1) Diploma in gemmology and diamond grading five months. Eligibility Secondary School Certificate. (SSC)




2) Diamond cutting course (Certificate Course) Six weeks approximately.

Eligibility Diploma in Gemmology,

3) Diploma in coloured gems and diamond grading

பம்பாயிலுள்ள St. Xavier கல்லூரியும், இத்துறையில் டிப்ளமோ வகுப்பினை நடத்துகிறது. ஜெய்ப்பூர் நகரில் மத்திய அரசுப் பயிற்சிப்பள்ளி இத்துறையில் ஆறுமாத காலப் பயிற்சி வகுப்பினை நடத்துகிறது. தமிழகத்தில் சென்னையில் Small Industries Service Institute (65/1, G.S.T. Road, Chennai - 600 032.) என்ற நிறுவனம் gem cutting and polishing என்ற பயிற்சியினை நடத்துகிறது. பயிற்சிக் காலம் ஆறு மாதங்களாகும். பத்தாம் வகுப்புத் தேறியவர்கள் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு 18 முதல் 35 வரை ஆகும். மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சூரத் நகரில் Advance Course in Diamond Technology, 45 வாரங்களில் நடத்தப்படுகிறது. பட்டதாரிகள் இதில் சேரலாம். தங்க நகை வடிவமைப்புக்கள் பற்றிய பயிற்சிகளும் பம்பாய் ஜெய்ப்பூர் சூரத் போன்ற நகர்களிலும் வழங்கப்படுகின்றன. பம்பாயிலுள்ள SNDT Women's University இத்துறையில் புதிய பயிற்சியினை அண்மையில் வழங்கியுள்ளது.

இத்துறையில் பயிற்சி பெற்ற இந்தியர்களுக்கு உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் வேலை வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன.

**18. மக்கள் தொடர்பு (Public Relations)**

மனித மதிப்புக்கள் விரைந்து வீழ்ந்து வருகின்றன. இக் காலகட்டத்தில் மனித உறவைப் பலப்படுத்துவது இன்றியமையாத பணியாகும். நிறுவனங்கள் தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் கூட்டுத் துறையிலும் பெருகி வருவதை நாம் அறிவோம். அமைப்புக்களிடையேயும், நிறுவனங்களிடையேயும் உறவினை உருவாக்கி மேம்படுத்திப் பாதுகாப்பது சிரமமான பணி. இப்பணியினைத்தான் மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்து வருகின்றனர். இதற்கான பயிற்சியினைச் சான்றிதழ் பட்டயப் படிப்புக்கள் மூலம் பெறமுடியும். இதழியியல் துறையிலோ, மக்கள் தொடர்புத்துறையிலோ பணியாற்றுபவர்கள் இப்பணியைச் செவ்வனே செய்ய முடியும். குறைந்த அளவு பட்டதாரிகள்தான் இப்பயிற்சியில் சேர முடியும். டெல்லியில் உள்ள 'Indian Institute of Mass Communication' இத்துறையில் முதுநிலை பட்டயப் படிப்பினை வழங்குகிறது. சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற இடங்களில் உள்ள பாரதிய வித்தியாலயா இதற்கான பயிற்சியினை அளிக்கிறது. கொச்சியில் உள்ள 'School of Communication and Management Studies' என்ற நிறுவனம் அஞ்சல் வழியாகவும், நேரடியாகவும் இப்பயிற்சியினை அளிக்கிறது. டெல்லியிலுள்ள YMCA Institute of Mass Media Studies, பூனாவில் உள்ள Symbiosis Institute of Journalism and Communication, பம்பாயிலுள்ள Xavier Institute of Communication, Sophia College, Somani Polytechnic, N.M. Institute of Management Studies, போன்ற நிறுவனங்கள் இப்பயிற்சியினை அளிக்கின்றன. பஞ்சாப் சண்டிகர், கல்கத்தா, உஸ்மானியா, பனாரஸ் பல்கலைக் கழகங்கள் இத்துறையில் பட்டயப்படிப்பினை வழங்கு கின்றன. வளர்ந்து வரும் இத்துறையில் வேலை வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன.

**19. மருத்துவம் சாராபடிப்புத்துறை (Paramedical Studies)**

மருத்துவத் துறைக்குத் துணை புரிகின்ற துறை paramedical என்று வழங்கப் பெறுகின்றது. physiotherapy, occupational therapy, prosthetics and orthotic engineering, audiology and speech therapy, opthalmic technology and medical laboratory technology என்பன இதில் அடங்கும். மருந்தகங்களும், பாலிகிளினிக்குகளும் சிறு நகரங்கள் முதல் பெரு நகரங்கள் வரை பெருகி வருகின்றன. இத்துறையில் பயிற்சி பெற்றவர்கள் குறைவாக இருப்பதால் பல சிக்கல்கள் எழுகின்றன. உள்நாட்டிலேயே இவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் இருந்த போதிலும் பெரும்பாலோர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர். எனவே, இத்துறையினருக்குப் பயிற்சி அளிக்க அண்மைக் காலங்களில் சுயநிதி நிறுவனங்கள் பெருகி வருகின்றன.

Physiotherapy, Occupational therapy என்ற துறைகளில் பயிற்சி பெற, The Rehabilitation Council of India (4, Vishnu Digambar Marg, New Delhi - 110 002). என்ற அமைப்பு நுழைவுத் தேர்வுகளை நடத்துகிறது. வகுப்பில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் 50 விழுக்காடுகள் தனித்தனியே பெற்றிருப்பதோடு ஆங்கிலத்திலும் தேர்வு பெற்றிருக்க வேண்டும். இளநிலை (Honours) என்ற படிப்பினையுடைய பயிற்சிக் காலம் மூன்று ஆண்டுகளும் அதற்குப் பின்னர் ஆறுமாத காலம் உள்ளிருப்பு (Intensive) ஆகும். இந்தப் பயிற்சியின் நுழைவுத் தேர்விற்கான விளம்பரம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரியில் வெளியிடப்படும். மே, ஜூன் மாதங்களில் தேர்வுகள் நடைபெறும் The Rehabilitation Council of India நடத்துகின்ற நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் கீழ்க்கண்ட இரு நிறுவனங்களில் பயிற்சி பெறுவர்.

National Institute of Rehabilitation Training and Research, Cubtad District.

National Institute for Orthopaedically Handicapped, Calcutta.

இவை தவிர, தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரியிலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், வேலூர் Christian Medical College லும் இப்பயிற்சிகள் தரப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் தமிழகத்தில் பல சுயநிதிக் கல்லூரிகளில் இப்பயிற்சிக்கான பட்டயப் படிப்புத் துவங்கப்பட்டுள்ளது.

Prosthetic and Orthotic Engineering :

எலும்பு முறிவு, நரம்பு முறிவு மருத்துவத் துறை வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. டெல்லியிலுள்ள The Rehabilitation Council of India இதற்கான நுழைவுத் தேர்வினை நடத்துகிறது. 10+2 படித்தவர்களுள் இயற்பியல், வேதியியல், கணிதவியல், பாடங்களில் 50 விழுக்காடுகளும் ஆங்கிலத்திலும் தேர்வு பெற்றிருக்க வேண்டும். நுழைவுத்தேர்வு இந்தப்பாடங்களின் அறிவினைச் சோதிக்கும் வகையிலேயே அமையும். இந்தத் துறையில் இரண்டரை ஆண்டு பட்டப்படிப்பும் மூன்றாண்டு உள்ளிருப்புப் பயிற்சியும் இடம்பெறும். மேற்குறித்த கல்வி நிலையங்களிலேயே இந்தப் பயிற்சியும் நடத்தப் படுகிறது. டெல்லியிலுள்ள 'The Department of Rehabilitation at Safdarjung Hospital' மூன்றாண்டிற்கான பட்டயப் படிப்பினை வழங்குகிறது. இந்த மருத்துவமனை ஜூலை மாதத்தில் இதற்கான விளம்பரத்தினை ஆண்டுதோறும் வழங்கும்.

Audiology and Speech Therapy :

+2 முடித்தவர்கள் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் 50 விழுக்காடுகள் பெற்று இருத்தல் வேண்டும். இளநிலை பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகள் பயிற்சிக் காலங்களில் வழங்கப்படுகிறது. இவற்றுள் ஆறுமாத கால உள்ளிருப்புப் பயிற்சியும் அடங்கும். தமிழகத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் இப்பயிற்சியினை அளிக்கிறது. பம்பாய் நகரில்

B.Y.L. Nair Hospital
T.N. Medical College
Aliyaver Jung National Institute of the Hearing Handicapped.

என்ற மூன்று நிறுவனங்களும் இப் பயிற்சியினை அளிக்கின்றன. மைசூரில் உள்ள 'All India Institute of Speech and Hearing' டெல்லியிலுள்ள All India Institute of Medical Science சண்டிகரிலுள்ள Post Graduate Institute of Medical Education and Research.

மங்களூரில் உள்ள College of Psyotherapy, Speech and Hearing போன்ற நிறுவனங்களும் இப்பயிற்சியினை அளிக்கின்றது.

Opthalmic Technology / Optometry

10+2 முடித்தவர்களுள் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது கணிதம் இவற்றில் தனித்தனியே 50 விழுக்காடு பெற்றவர்கள் இப்பயிற்சியில் சேரலாம். மூன்று ஆண்டு B.Sc., இளநிலைப்பட்டப்படிப்பும் அதன்பின்னர் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கான பட்டப்படிப்பும் வழங்கப் படுகின்றன.

All India Institute of Medical Science, Delhiயில் மூன்று ஆண்டு B.Sc., படிப்பு வழங்கப் படுகிறது.

மூன்று ஆண்டு பட்டயப் படிப்புகள் கீழ்க்கண்ட நிறுவனங்களில் வழங்கப் படுகின்றன.

Jaslok Hospital, Mumbai
K.E.M. Hospital, Mumbai
E.Y.L. Nair Hospital, Mumbai

இரண்டு வருடப் பட்டயப் படிப்புகள் கீழ்க்கண்ட நிறுவனங்களில் வழங்கப்படு கின்றன.

School of Optometry, Institute of Opthalmology,
Sarojini Devi, Eye Hospital, Hyderabad,
Govt. Medical College of Aurangabad and Nagpur
Govt. Opthalmic Hospital, Chennai
Gandhi Eye Hospital, Aligarh
Sitapur Eye Hospital, U.P.
Medical Laboratory Technology

மருத்துவத்துறை விற்பன்னர்களோடு இவர் பணியாற்ற வேண்டியிருக்கிறது. +2 முடித்தவர்கள் (அறிவியல்துறை) இப்பயிற்சியில் சேரலாம். இப்பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். கீழ்க்கண்ட நிறுவனங்கள் இப்பயிற்சியை வழங்குகிறது.

Pant Institute of Technology, Pondicherry
Jawarharlal Institute of Post Graduate Medical Education and Research (JIPMER) Pondicherry
University of Kerala Medical College, Thiruvananthapuram
Post Graduate Insitute of Medical Science, Chandigarh

டெல்லியிலுள்ள AIIMS இத்துறைக்கான பயிற்சியினை அளிக்கிறது. பம்பாயிலுள்ள

SNDT பல்கலைக்கழகம் இப்பயிற்சியினை அளிக்கிறது. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டு. அவற்றுள் ஆறுமாதகால உள்ளிருப்புப் பயிற்சி யும் அடங்கும்.

தமிழகத்தில் இப்பயிற்சி இரண்டாண்டு பட்டயப்படிப் பாகவும், ஓராண்டு சான்றிதழ் படிப்பாகவும் நடத்தப்படுகிறது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. அண்மைக்காலங்களில் இத்துறையினருக்கான பயிற்சியினை அளிக்க சுயநிதிக் கல்லூரிகள் நிரம்ப துவக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியினைப் பெற்றவர்கள் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. தனியார் மருந்தகங்களிலும் பணியாற்றிச்சம்பாதிக்க வாய்ப்பிருக்கிறது. வெளிநாடுகளிலும் இவர்களுக்கு வேலைவாய்ப்புகள் இருக்கின்றன.



### மதிப்பீடு

எண்ணற்ற துறைகளில் வேலை வாய்ப்புகள் இருந்த போதிலும், அதனை இளைஞர்கள் உரிய காலத்தில் இனங் கண்டு பயிற்சி பெற்றால்தான் அத்துறையில் அவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறமுடியும். குறிப்பாக மருத்துவம், பொறியியல், வேளாண்மை, மேலாண்மை, துறைகளில் பயின்றவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் முடியும். தாங்களாகவே சுயமாகப் பணியாற்றவும் முடியும். அண்மைக் காலங்களில் அதிவேகமாக வளர்ந்துவரும் கம்ப்யூட்டர் கல்வி, அதன் பயன்கள் ஒளிமயமான உள்நாட்டு மேல்நாட்டு வேலைவாய்ப்புகள் போன்றவற்றினை இளைஞர்கள் நன்கு அறிவர். மாநகர், பெருநகர், இளைஞர்கள் வேலைவாய்ப்புச் செய்திகளை மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும் பயன்பெற்ற நண்பர்களோடு கலந்துரையாடு வதன் மூலமாகவும் வேலை வாய்ப்புகளை அறிந்து, விரைந்து செயல்படுகின்றனர். ஆனால் நாட்டின் எங்கோ மூலைப் பகுதிகளில், மலைப்பகுதிகளில், கடலோரங்களில் வாழ்ந்து வருகின்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புச் செய்தியினை நகர்ப் புறத்து இளைஞர்களைப்போல அவ்வளவு விரைவாகவும், உரிய காலத்திலும் அறிந்திருக்கவில்லை என்பது நாம் அறிந்த ஒன்றாகும். எனவேதான் அவர்கள் காலம் தாழ்ந்த முயற்சி காரணமாகப் பலனை அடைய முடியவில்லை.

ஏன், தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் தொலைக்கல்வி இயக்கங்கள் அளிக்கின்ற வேலைக்கான சான்றிதழ், பட்டயப் படிப்புகளைக் கூட கிராமப்புற இளைஞர்கள் இன்றும் முழுமையாகப் பயன்படுத்த வில்லையே என்ற ஆதங்கமும் எனக்குண்டு. தொலைக்காட்சி ஓரளவு கிராமப்புற இளைஞர்களுக்கு இந்த வகையில் இன்னும் உதவ வேண்டும். தமிழக அரசின் பொதுத்துறை நூலகங்கள் வேலைவாய்ப்புப் பற்றிய நூல்களையும் அறிக்கைகளையும் நூலகங்களிலே அறிவிக்கவேண்டும். ஊராட்சி மன்ற அலுவலகங்கள் இப்பணியினைச் செவ்வனே செய்யவேண்டும். இளம்பட்டதாரி கள் 'எனக்கு வேலைதாருங்கள்' என்று சட்ட மன்ற உறுப்பினரிடமோ, மக்களவை உறுப்பினரிடமோ, வேண்டி விண்ணப்பம் தருவதற்கு மாறாக, தனக்கு இன்ன துறையில் பயிற்சி இருக்கிறது என்றும், வங்கிக்கடன் கிடைக்குமேயானால் சுயதொழில் துவங்கிடத் தயாராக இருக்கிறேன் என்றும் கூறக்கூடிய மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் இத்தப்பிரச்சினை தீரும். மனித ஆற்றலை ஆற்றுப்படுத்தினால் திறன்கள் வளரும்; வேலைவாய்ப்புகள் பெருகும்; ஒளிமிக்க எதிர்காலம் பிறக்கும்.

# நோபெல்

பெ.நா. அப்புசுவாமி

'இன்றைக்கு என் பேச்சு எப்படி இருந்தது?' 'நேற்று நான் ராகம் பாடியது எப்படி?' 'அன்று நான் பந்து ஆடியது எப்படி?' என்றெல்லாம் பிரபலகிகளும், பாடகர்களும், பந்தாடுபவர்களும் ஆவலோடு கேட்கிறார்கள். 'பேஷ்! வெகு நன்றாயிருந்தது' என்று சொல்லும் பதிலானது அவர்கள் காதில் தேவாமிர்தம் போல் படுகிறது. அப்படிப் புகழ்பவன் அறிவாளியாயிருக்க வேண்டும் என்பதில்லை; ராகத்தின் சுவை தெரிந்தவனாயிருக்க வேண்டும் என்பதில்லை. மக்களுடைய மனமானது பிறருடைய நன் மதிப்பை அவ்வளவு நாடுகிறது; சாமானியன் ஒருவனுடைய வெறும் பேச்சுக்கூட மனத்துக்கு அத்துணை ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கிறது.

சாமானியர்களுடைய வெறும் பேச்சே அத்தனைப் பாராட்டப்படுமானால், சிறந்த அறிவாளிகள் பலர் ஒன்றாகக்கூடி, 'உலகம் அனைத்திலும் ஓர் ஆண்டு முழுவதிலும் செய்த செயல்கள் யாவற்றிலும் இன்னார் செய்த செயல்தான் தலை சிறந்தது' என்று ஏகோபித்து முடிவு செய்து, நற்சாட்சிப் பத்திரம் ஒன்றையும், பொற்பதக்கம் ஒன்றையும், சுமார் இலட்சம் ரூபாய் பெறுமான பொற்குவை ஒன்றையும் பரிசாக அளித்தால் எவனுடைய மனந்தான் குளிர்வடையாது? எவன்தான் ஊக்கமும் உற்சாகமும் பெறமாட்டான்?

இவ்வாறு ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு உலகத்தார் அனைவராலும் 'எல்லாப் பரிசுகளிலும் தலைசிறந்தது' என்று கொண்டாடப் படும் பரிசு நோபெல் பரிசு எனப்படுவது. இது ஸ்வீடன் நாட்டினரான ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

இவருடைய பாட்டனார் இராணுவத்தில் ரணவைத்தியர். இவருடைய தகப்பனார் எம்மானுவெல் விஞ்ஞான ஆசிரியர். இவர் வெடி மருந்துகளையும் கடலினுள்ளே வெடிக்கும் கடற்கண்ணிகளையும் இயற்றியும் ஆராய்ந்தும் வந்தார். உயிரைக் கொள்ளை கொள்ளும் இந்தத் தொழிலில் ஈடுபட்ட எம்மானுவெல் உயிருக்கு உதவி செய்யும் காரியத்திலும் ஈடுபட்டு ரண வைத்திய ஆயுதங்களையும், நோயாளிக்கு உதவும் ரப்பர் தலையணைகளையும் இயற்றி வந்தார்.

வெடி மருந்தைச் செய்வதே அபாயகரமானது. அதோடு அதையொட்டிய ஆராய்ச்சியும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்? எம்மானுவெலுடைய தொழிற்சாலையில் ஒரு முறை பெரிய வெடி விபத்து நேர்ந்தது. தொழிற்சாலை தூள் தூளாகிவிட்டது. அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் பலத்த சேதம், ஆனால் ஊராருடைய கோபத்துக்கு உள்ளான எம்மானுவெல் அயல்நாடு செல்ல வேண்டியதாயிற்று.

எம்மானுவெல் ருஷியாவுக்குச் சென்று அங்கே கிட்டத்தட்ட இருபது ஆண்டுக்காலம் தம்முடைய தொழிலை நடத்தி வந்து, பிறகு தம் ஊருக்குத் திரும்பினார். ரஷியாவிலே தங்கிய அவர் மகன் லுட்விக் என்பவன்தான் பாக்கு என்னும் இடத்திலுள்ள மண்ணெண்ணெய்ச் சுரங்கங்களைக் கண்டுபிடித்தவன்.

எம்மானுவெல் தம் சொந்த நாட்டை அடைந்தபிறகும், முன்போல் தம்முடைய தொழிலையே நடத்திவந்தார். மறுபடியும் ஒரு பெரிய வெடி விபத்து உண்டாயிற்று. அதில் எம்மானுவெலுடைய மகன் ஒருவன் இறந்து போனான். அதிர்ச்சியாலும், பொருள் நஷ்டத்தாலும், புத்திர சோகத்தாலும் மனம் முடைந்த எம்மானுவெலும் அவருடைய மனைவியும் அப்படியே படுத்த படுக்கையாய்ப் போய்விட்டார்கள். அதன் பிறகு அவர்களுடைய மகனான ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் அந்தத் தொழிலை மேற்கொண்டு நடத்திவந்தார். இவர்தாம் நோபெல் பரிசை ஏற்படுத்தியவர்.

ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் 1833 ஆம் ஆண்டில் ஸ்டாக் ஹோம் நகரத்திலே பிறந்தார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே அவர் பலவீனமாக இருந்தார். ஆயுள் முழுவதும் அடிக்கடி தலைநோயினால் வருந்துவார்.

சிறுவயது முதலே இவருக்கு இரசாயனம், பௌதிகம், எந்திரம் முதலிய விஞ்ஞான சாத்திரங்களில் மிக்க அவா இருந்தது. இவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்த எந்திர சாஸ்திர நிபுணராகிய எரிக்ஸன் என்பவரோடு தங்கி, அவரிடம் வேலை கற்றுக்கொண்டார். அப்போது எரிக்ஸன் பல தடவைகளில் சோதனைகளை நடத்தப்போதிய பணம் இல்லாமல் துன்புறுவதைக் கண்டு, தாம் பணக்காரரானால் விஞ்ஞானிகளுக்கு உதவும்படியாகப் பெரிய நிதி ஒன்றை அளிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டார். பிற்காலத்தில் இதை நிறைவேற்றுவதற்காகச் செய்த ஏற்பாடுதான் 'நோபெல் பரிசு!'

நாற்பது ஐம்பது ஆண்டுக்கு முன் 'நைட்ரோக்ஸிஸெரின்' என்பதுதான் மிகச் சிறந்த வெடி மருந்து, ஆனால் எதிர்பாராத வேளைகளில் வெடித்துப் பெருத்த உயிர்ச் சேதமும் பொருள் நஷ்டமும் உண்டாக்கி வந்தது. வெடிக்கும் சக்தியில் மிகச் சிறந்ததாயும், பயமின்றிக் கையாளக் கூடியதாயும் உள்ள வெடிமருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நோபெல் மிகவும் தீவிரமாய் முயன்று வந்தார்.

இவ்வாறு முயன்று வருகையில் தற்செயலாக நேர்ந்த சம்பவம் ஒன்று இவருக்கு உதவி செய்தது. பீப்பாய் ஒன்றிலிருந்து இலேசாக ஒழுகிய நைட்ரோக்ஸிஸேரின், பீப்பாயைச் சுற்றி அணைத்துக் கொட்டியிருந்த மணலோடு கலந்து கட்டியாக இருந்தது. இதைச் சோதித்தபோது தாம் நாடிய குணங்கள் இதற்கு இருப்பதை நோபெல் தெரிந்து கொண்டார்.



பெ.நா. அப்புசுவாமி

பிறகு முக்கால் பங்கு நைட்ரோக்ஸிஸரினையும் கால் பங்கு ஒருவகை மண்ணையும் கலந்து சிறந்த வெடிமருந்தை இயற்றினார். இதுதான் இக்காலத்தில் 'டைனமைட்' என்று வழங்கும் வெடிமருந்து.

பீரங்கி, துப்பாக்கி, கடற்கண்ணி முதலியவை மூலமாக இது செய்துள்ள கெடுதியும் கணக்கற்றது. எனினும், இதனால் உலகத்துக்கு விளைந்த நன்மைகளும் கணக்கில. நமது நாகரிகமே இதனால் புதிய கிளர்ச்சியை அடைந்ததென்று சொல்லலாம்.

தூர தேசங்களைப் பிணைக்கும் ரெயில்பாதைகளைப் போடுவதற்கும், வழியே குறுக்கிடும் மலைகளைத்தகர்த்தெறிவதற்கும், பூமியைக் குடைந்து, அதன் அடியிலே ஒளிந்து பயனற்றுக் கிடக்கும் செல்வங்களைக் கொண்டுவருவதற்கும், கடல்களை இருகூறாக்கும் நிலத்தைப் பெயர்த்தெறிந்து சமுத்திரங்களை ஒன்றாக இணைப்பதற்கும் இது உதவுகிறது. கிணறு வெட்டவும், வாய்க்கால் வெட்டவும், மரம் வைக்கக் குழி தோண்டவும் உதவுகிறது. நதிகளைத் தடுத்து அணைகளைக் கட்டிப் பாலைவனத்தைச் செழிக்கச் செய்வதற்கும் கடல் துறைமுகங்களைக் கட்டி வர்த்தகத்தை வளர்ப்பதற்கும், பெரிய பாலங்களைக் கட்டி நாட்டை ஒன்றாக இணைப்பதற்கும் வேண்டிய பெரும் பாறைகளை இது பெயர்த்துத் தருகிறது.

ராட்சச சக்தி வாய்ந்த இந்த மருந்துப் பொடியினின்று நோபெல் பல இலட்சம் லட்சமாகப் பணம் சம்பாதித்தார். ஆயினும் இவர் சந்தோசமான சுக வாழ்வு வாழவில்லை. தாம் வாலிபத்தில் காதலித்த பெண் இறந்துவிட்டபடியால் இவர் திருமணம் செய்து கொள்ளாது நோயுற்ற உடலோடு, தன்னந்தனியாகவே வாழ்ந்து வந்தார். தீராத தலைநோவோடு வருந்திய நிலையிலும்கூட இவர்துர்நாற்றம் வீசும் சோதனைச்சாலையிலே வேலை செய்வார்.

இவரை அழகானவரென்று சொல்ல முடியாது. குள்ள வடிவம் உடையவர். இவருக்குப் பல மொழிகள் தெரியும். சுவைபட பேசுவார். நன்றாய்க் கதை சொல்லுவார். சற்றே அவநம்பிக்கையுள்ள சுபாவம். 1896-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ஆம் தேதியன்று தம்முடைய பாரிஸ் நகரத்துத் தொழிற் சாலையில் திடீரென்று இறந்து போனார். சுமார் இருபது லட்சம் பவுன் மதிப்புள்ள தம்முடைய சொத்து முழுவதையும் தர்மத்துக்கு எழுதி வைத்திருந்தார்.

தம்முடைய சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை ஆண்டுதோறும் ஐந்து பரிசு களாக வழங்க வேண்டுமென்று இவருடைய மரணசாஸனத்தில் கண்டிருந்தது. இதன்படி பரிசளிக்கப்படும் ஆண்டுக்கு முந்திய ஆண்டிலே பௌதிகம், இரசாயனம், வைத்தியம், இலக்கியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளுள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த செயலைச் செய்த மேதாவியைத் தேர்தெடுத்து அவருக்குப் பரிசும், பொற் பதக்கமும், நற்சான்று பத்திரமும் அளித்து வருகிறார்கள். பரிசின் மதிப்பு இப்போது சுமார் இலட்சம் ரூபாயாக இருக்கிறது. இதைத்தான் நோபெல் பரிசு என்று சொல்லுகிறார்கள். பாரபட்சம் இன்றி, ஜாதி, மதம் தேசம் முதலிய வேற்றுமைகளைக் கருதாது, மதிப்பு ஒன்றையே கருத்தாகக் கொண்டு இப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. உலகத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும் இந்தப் பரிசையே மிகவும் சிறந்த பரிசாகக் கொண்டாடுவதால் இதைப் பெறும் மேதாவி ஒவ்வொருவரும் தன்னுடைய பிறவியில் பெரும் பேற்றைப் பெற்றதாகக் கருதுகிறான்.

இந்தப் பரிசை ஏற்படுத்தின நோபெல் இறந்த தினமாகிய டிசம்பர் மாதம் பத்தாம் தேதியன்று இந்தப் பரிசு அளிக்கப்பட்ட விவரங்கள் வெளியிடப்படும்.

இரசாயணத்துக்கும், பௌதிகத்துக்கும் பரிசுக்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பொறுப்பும் ஸ்வீடன் நாட்டு விஞ்ஞான சங்கத்தாரைச் சேர்ந்தவை. வைத்தியப் பரிசுக்குத் தக்கவரைத் தேர்ந தெடுப்பது ஸ்டாக்ஹோம் நகரத்துக் காரனின் ஸ்தாபனம். இலக்கியப் பரிசுக்குத் தக்கவரைத் தேர்ந்தெடுப்பது ஸ்டாக்ஹோம் இலக்கியச் சங்கம். சமாதானப் பரிசுக்கு உரியவரைத் தேர்ந்தெடுப்பது நார்வே தேசத்துப் பார்லிமெண்டு சபையார் பொறுக்கி எடுத்த ஐவர் கொண்ட கமிட்டி ஒன்று.

*1901* ஆம் ஆண்டு முதல் இப்பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பல நாட்டினர் இப்பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள பிறநாட்டு மக்கள் யாவரும் தாங்கள் பெறக்கூடிய பரிசுகள் அனைத்திலும் சிறந்ததாகவே நோபெல் பரிசைப் பாராட்டி வருகிறார்கள். ●

**– முனைவர் மு. வளர்மதி தொகுத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113-வெளியிட்டுள்ள 'பெ.நா. அப்புசாமியின் அறிவியல் கட்டுரைகள்' என்ற நூலிலிருந்து.**

# அறிவியல் துளிகள்

பச்சையம் இருப்பதால்தான் இலைகள் பச்சையாக இருக்கின்றன எனப்படுகிறது; யூகலிப்டஸ், ரோஜா போன்றவற்றின் இலைகள் 'ரோஸ்' நிறமாக இருப்பது ஏன் தெரியுமா? அவற்றின் தளிர்களில் 'ஆந்தோஸையனின்' (Anthocyanin) என்ற நிறமி இருப்பதால்தான். ஆனால், அவற்றின் இலையானது முற்ற முற்ற அந்த நிறமியானது பலவீனப்பட்டுவிடும்; இலைகளும் பச்சைப்பசேல் என்று மாறிவிடும்.

மருதாணி இலைகளில் லாஸோன் (Lawsone) என்கிற நிறமி உள்ளது; நம் விரல் நகங்களைச் சிவப்பாக்குவது இதுதான்!

*சொன்னால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்; தாவரங்களில் நகரும் தாவரங்கள் உண்டு தெரியுமோ? பொதுவாக அவை ஒரு சில பாசிகளில் மட்டுமே இருக்கின்றன. அந்த நகரும் வகைப்பாசிகள் கிளைமைடோமொனஸ்* (Chlamydomonas), Eudorina, Pandorina Volvox – *எனப்படும்.*

# படமும்




பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.96 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கிறார்.



தந்தை பெரியார் பிறந்தநாளான 17.9.96 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்.



மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களை இந்திய ஜப்பான் கூட்டமைப்பின் அலுவலர்கள் சந்தித்து உரையாடினார்கள். (19.9.96)



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்களுடன் புதுடில்லியில் மாண்புமிகு மத்திய வெளி உறவுத்துறை அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால் அவர்களை சந்தித்து இலங்கை அகதிகள் குறித்து பேசினார். (21.9.96)



புதுடெல்லியில் காவிரி நீர் பங்கீடு குறித்து பேசுவதற்காக கர்நாடக பவன் சென்ற மாண்புமிகு தமிழக முதல்வரை மாண்புமிகு கர்நாடக முதல்வர் வரவேற்று அழைத்துச் சென்றார். (21.9.96)

சிதம்பரனார் மாவட்டம் ஒட்டப் பிடாரத்தில் நடந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் 125 வது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு ஆலடி அருணா, திருமதி ஜெனிபர் சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# செய்தியும்



# எங்கள் ஊர் பிரச்சினை

ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம் ஆதங்குடி ஊராட்சியில் சிவன் கோவில் ஒன்று உள்ளது. முந்தைய ஆட்சியில் ஒரு கால பூசைக்குப் பணம் ஒதுக்கிக் கடிதம் வந்தது. பின்னர் காசோலை வந்து கொண்டே இருந்தது. ஆனால், அதை மாற்றிச் செலவு செய்ய உத்தரவு வரவில்லை. இதன் காரணமாக பூசை செய்யும் (எனக்கு) அர்ச்சகருக்குப் பணம் கிடைக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒரு கால பூசைத் திட்டம் என்ற பெயர் பலகையும் ஒதுக்கீடு செய்த நிலை விபரம் பலகையில் உள்ளது. ஆகையால், தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வணக்கமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
**எஸ். கண்ணன்,** ஆதங்குடி அஞ்சல்,
பொதக்குடி – 614 103.

## தீர்வு

ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், ஆதங்குடி என்ற கிராமத்தில் அருள்மிகு விருப்பாசீஸ்வரர் (சிவன்) கோயில் உள்ளது. வருமானம் ஏதுமற்ற நிலையில் உள்ள இக்கோயிலுக்கு இத்துறையில் மூலம் அறங்காவலராக நியமனம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டும், கிராமத்திலுள்ள எவருமே அறங்காவலராக நியமனம் பெற முன்வராத நிலையில், மன்னார்குடி அருள்மிகு. மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில் செயல் அலுவலரை இக்கோயிலுக்குத் தக்கார் ஆக நியமனம் செய்யப் பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி கிராம முக்கியஸ்தர்கள் தங்களுக்குள் ஒருவரான திரு.ஜி. சேகர் என்பவரை இக்கோயிலின் நிர்வாகத்தை கவனித்து வர வாய்மொழியாக ஏற்பாடு செய்து, அவர் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் கோயில் நிர்வாகத்தைத் கவனித்து வருகிறார்.

இந்நிலையில் மிகவும் வறிய நிலையிலுள்ள இத்திருக் கோயிலுக்கு இத்துறையில் மூலம் ஒரு கால பூசை திட்டத்தில் சேர்ந்து அதற்கு ரூ. 25,000/- வைப்பு நிதி முதலீடு ஏற்படுத்தி மேற்படி முதலீட்டிலிருந்து மாதாந்திர வட்டி தொகைக்கான வட்டி வாரண்டுகள் மேற்படி நடைமுறை நிர்வாகியான திரு ஜி. சேகர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு வந்துள்ளது. இவர் சட்டப்படி நியமனம் பெற்ற அறங்காவலராக இல்லாததால் மேற்படி மாதாந்திர வட்டி வாரண்டுகளை வங்கியில் செலுத்தி பணம் பெற முடியாது இருந்ததால் மாதாமாதம் ரொக்கம் பெற்று பூசைக்குச் செலவிட முடியாத நிலையிலுள்ளது. இதுவரை வழங்கப்பட்ட வட்டித் தொகைக்கான வாரண்டுகள் காசாக்கப்படாமல் நிலுவையில் உள்ளனவே தவிர, எந்த வகையிலும் இத்தொகை முறையற்ற வகையில் பயன்படுத்தப்படவில்லை. இந்தச் சிக்கலான நிலை ஏற்பட்டதால், நடைமுறை நிர்வாகியும் கிராமத்தினரும் தங்களாகவே நிதி சேர்த்து, இத்திருக்கோயிலில் தினசரி ஒருகால பூசையை நடத்தி வருவதாக உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். புகார் செய்த திரு கண்ணன் என்பவரும் தனக்குப்பணம் கிடைக்கவில்லை என்று கூறியுள்ளாரே தவிர, பூசை நடத்தப்படவில்லையென்றோ, அரசு வழங்கிய தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவோ தெரிவிக்கவில்லை. மேலும், இவர் அருகாமையிலுள்ள சரக ஆய்வரிடமோ, தஞ்சாவூர் உதவி ஆணையரிடமோ இப்பிரச்சினை குறித்து விவரம் ஏதும் தெரிவிக்கவில்லை.

எனினும், ஒருகால பூசை திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிடும் வகையில் உடனடியாக தக்கார் தனது பதவி நிலையில் வங்கி கணக்கு துவக்கி, வட்டி வாரண்டுகளை காசாக்கி மாதாமாதம் பூசை செலவுகளுக்கு கொடுத்துவருமாறும், அதே சமயத்தில் கிராமத்தினர் ஒத்துழைப்புடன் திருக்கோயிலின் அபிவிருத்தி செய்திட ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கடுமையாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்கிறேன்.

**வ. ராமதாஸ்,**
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 34.

---

எங்கள் கிராமம் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் அரக்கோணம் வட்டம் நெமிலி ஒன்றியத்தைச் சார்ந்த சம்பத்துராயன்பேட்டை எனும் கிராமம். பெரும்பாலும் விவசாயம், பவர்லூம் பட்டுத்தறி ஆகிய தொழில்கள் நடைபெறும் இக்கிராமத்தில் மேனிலைப்பள்ளி, டெலிபோன் இணைப்பகம் அஞ்சல் துறை ஆகியவைகள் இயங்குகின்றன. மக்கள் தொகையோ சுமார் 10,000. நெடுஞ்சாலையிலிருந்து ஊர் வரை முதன் முதலில் மின் கம்பம் நட்டபோது குழல் விளக்குகள் பொருத்தினார்கள். பிறது அந்த விளக்குகள் கடந்த 6 ஆண்டுகளாக கிடையாது. இரவு நேரத்தில் ரோடிலிருந்து ஊருக்கு வர அச்சமாக உள்ளது. இதையும் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**ஏ.ஆர். சொக்கநாதன்,**
சம்பத்துராயன்பேட்டை - 631 002.
அரக்கோணம் தாலுகா.

## தீர்வு

பார்வையில் ''எங்கள் ஊர் பிரச்சினை'' தலைப்பில் சம்பத்துராயன்பேட்டை திரு.ஏ.ஆர். சொக்கநாதன் கடிதம் கிடைக்கப்பெற்றோம். அதற்கான விளக்கம் கீழே அளித்துள்ளேன்.

ஊராட்சியில் 45 விளக்குகள் எரிகின்றன. இதில் தற்போது சம்பத்ராயன்பேட்டையில் 18 விளக்குகள் எரிகின்றன. இதில் இவர் குறிப்பிடும் ரோட்டில் 4 விளக்குகள் எரிகின்றன. இவர் குறிப்பிடும் சாலை 3. கி.மீ. இல்லை. 1.2 கி.மீ. தான் உள்ளது. 6 விளக்குகள் கோருகிறார். ஏற்கனவே உள்ள விளக்கு களுக்கு மின் கட்டணம், மற்றம் ஊராட்சி பணியாளருக்கே ஊதியம், இதர செலவினங்கள் பணம் இன்றி 3 மாதமாக வழங்கப்படவில்லை. நிதியற்ற ஊராட்சிக்கு அரசு வழங்க இருக்கும் நிதி ஆதார அடிப்படையில் மின் விளக்குகள் எரிவிக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே. அரிகிருஷ்ணன்,**
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், நெமிலி,
வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம்.

# வாசகர் இதயம்

**அற்புதம்...**

ஆசிரியர் மடலோ அற்புதம், தேசத்தைக் காக்க வழங்கிய பொக்கிசம்; கல்லறைக்கு வழிசெய் 'எய்ட்சின்' கட்டுரை, நல்வழி கொடுக்கும் நாட்டினுக்கு மருந்து, வாலியின் 'இரக்கம்' கவிதை வளமையின் சுரங்கம் நாளெல்லாம் சுவைக்க நல்கிய தமிழரசே! நன்று! நன்று!

**– கெங்கை பாலதா,**
சின்னக் கலையம்புத்தூர்,
மன்னர் திருமலை மாவட்டம்.

**சிரிப்பிதழா?...**

சிறப்பிதழா? சிரிப்பிதழா? ஆவணித்திங்கள் மலர்ந்த தமிழரசு இதழ், கலைவாணர் சிறப்பிதழாக, பேரவைச் சிரிப்பலைகளுடன், சிரிப்பிதழாக மலர்ந்துமணம் பரப்பியது. முன்பெல்லாம் தமிழரசில் வெண்பாப்போட்டி வருமே?அதுபோல், இனிமேலும் தமிழரசில் தரவேண்டும்.

**– கவிஞர் பூபாளம் ப. முருகேச பாண்டியன்,**
கரப்பாடி, பெரியார் மாவட்டம்.

**என் ஆசை...**

மற்ற இதழ்களைப்போல் கேள்வி-பதில் பகுதி தமிழரசிலும் வரவேண்டும். என் ஆசை நிறைவேறுமா?

**– ஜி.ஆர். விஜய்,**
இரா. புதுப்பட்டி,
இராஜாஜி மாவட்டம்.

**படிக்கத் தூண்டுகிறது...**

தமிழில் வெளிவரும் பருவ இதழ்களில் ஒன்றிரண்டு மட்டுமே முழுவதும் (வரிவிடாமல்) படிக்கத்தூண்டுகிறது. அவ்வகையில் தமிழரசும் இடம் பெற்றுள்ளது. வாழ்த்துக்கள்.

**– ஜி. பழனிக்குமார்,**
சித்தையன் கோட்டை, திண்டுக்கல்.

**ஆச்சரியம்...**

'தமிழரசு' - அரசாங்க இதழ்தானா? ஒரே ஆச்சரியமாக இருந்தது. சென்ற மாதத்தைக் காட்டிலும் இம்மாதம் மிகவும் நன்றாக இருக்கிறது. இதழ் எப்போதுவரும் என ஆவலைத் தூண்டுகிறது.

**– மா.வெ.சு. மணியன்,**
மதுரை - 1.

**வழி காட்டி...**

வேலை வாய்ப்புகள் கட்டுரை - இன்றைய இளைஞர்களுக்குச்சரியான வழிகாட்டி, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வேலை வாய்ப்பு அறிவிப்புகளையும் இதழில் வெளியிடலாமே?

**– தி.வே. மூர்த்தி,**
அலங்கியம், பெரியார் மாவட்டம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927



# ஆசிரியர் மடல்

தமிழ் நாட்டில், அக்டோபர் 9,12 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

23 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதுதான் தமிழக அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை அறிவித்திருக்கிறது.

356 ஆண்டு காலப் பழமை மிக்கதான சென்னை மாநகராட்சிக்கு 1968ல் தான் கடைசியாகத் தேர்தல் நடந்தது. அப்போது 120 வட்டங்கள் இருந்த சென்னை மாநகராட்சியில், 1990 முதல் 155 வட்டங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.


1973க்குப் பிறகு, சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டு, அதிலிருந்து தனி அதிகாரி நிர்வாகத்திலேயே இருந்து வருகிறது. மதுரை மாநகராட்சி ஒரே ஒரு தேர்தலைச் சந்தித்தது. கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மற்ற மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டனவே தவிர, தேர்தலே இதுவரை அங்கெல்லாம் நடைபெறாதிருந்தது.

தமிழ்நாட்டில் உள்ள 6 மாநகராட்சிகளின் மேயர் பதவிகளுக்கு மட்டுமே 86 பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவைகளில் உள்ள 474 உறுப்பினர் பதவிகளுக்கு 4 ஆயிரத்து 310 பேர் மனுச் செய்துள்ளனர். சுமார் 48 கோடி ரூபாய் இத்தேர்தலுக்காகச் செலவாகும் என்று தேர்தல் ஆணையர் தெரிவித்திருக்கிறார்.

நாட்டு மக்கள் நலம்பெற வேண்டி அரசு செயல்படுத்தும் பல திட்டங்களின் பலன்கள், எல்லா மக்களுக்கும் எவ்விதக் குறையுமின்றிப் போய்ச்சேர உதவுவதில் இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

எனவே, வாக்காளப் பெருமக்கள் தம்முடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் விழிப்போடிருப்பது முக்கியம்.


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23